Registered at h G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி என் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 20 ஆம நாள ஷவ்வால் 26 (2-4-62) திங்கட்கிழமை இதழ் 5

Tegajothi TOOTH POWDER
SEGAR & Co. MADURAI
ஜெகஜோதி பல்பொடி
சேகர் அன் கோ. மதுரை

# ஸ்ரீமதி பண்டாரநாயகா லண்டன் செல்வார்?

## பிரிட்டனில் சாம்ராஜ்ய பிரதமமந்திரிகள் மகாநாடு

### இவ்வாரம் அறிக்கை வெளியிடப்படும்

கொழும்பு, ஞாயிறு

அடுத்து லண்டனில் நடைபெறவிருக்கும் காமன் வெல்த் பிரதமர்கள மகாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா லண்டன் செல்வார் எனத் தெரிகிறது. இந்த மக நாடு எப்போது நடைபெறும் என்னும் விஷயம்பற்றி பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மில்லன் இவ்வாரம் காமன்ஸ் சபையில் அறிக்கை வெளியிடுவார்.

சென்ற ஆண்டு காமன் வெல்த் பிரதமர்கள் மகாநாடு லண்டனில் நடைபெற்றது ஞாபகமிருக்கும். இம்மகாநாட்டில் இலங்கை உட்பட 12 சாம்ராஜ்ய பிரதமர்கள் கலந்துகொண்டனர். அடுத்து நடைபெறப்போகும் பிரதமர்கள் மகாநாட்டில் ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேரும் விஷயம்பற்றி ஆலோசிக்கப்படும். பிரிட்டன் பொதுச் சந்தையில் சேருமானல் சாம்ராஜ்ய நாடுகளின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என பல சாம்ராஜ்ய நாடுகளில் கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் இதுபற்றி முன்பே கவலை தெரிவித்திருந்தன.

சாம்ராஜ்யப் பிரதமர்கள் பரிசீலிக்கும்வரை, பிரிட்டன், ஐரோப்பிய பொதுச் சந்தையில் சேரக்கூடாது என கானடா பிரதமர் திரு. டீபன் பேக்கர் கூறியுள்ளார். காமன் வெல்த் நாடுகளில் ஏற்பட்டுள்ள கவலை காரணமாகவே, இவ்விஷயம்பற்றி ஆலோசிக்க திரு. மாக்மில்லன், சாம்ராஜ்ய பிரதமர்களை அழைத்துப் பேச விருப்பதாய்க் கூறப்படுகிறது.



இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா

## மத்திய சிரியாவில் நாஸரை ஆதரித்து ஆர்ப்பாட்டம்

### 5 ராணுவத்தினர் பலி; பல பொதுமக்கள் மாண்டனர்

டமாஸ்கஸ், ஏப்ரல் 1

ஐக்ய அராபியக் குடியரசு ஜனதிபதி நாஸரை ஆதரித்து மத்திய ஸிரியாவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் துருப்புகள் தலையிட்டதின்பேரில் 2 ஸிரிய ராணுவ அதிகாரிகளும், 3 போர் வீரர்களும் மரணமடைந்தனர். பொது மக்களில் பலர் கொல்லப்பட்டனர்.

ஐக்ய ஆராபியக் குடியரசின் கொடிகளையும், ஜனதிபதி நாஸரின் படங்களையும் தாங்கிக்கொண்டு ஆர்ட்பாட்டக்காரர்கள் அரசாங்கக் காரியாலயத்தை நோக்கிச் சென்று, அவைகள் மீது கொடிகளை ஏற்ற முயன்றனர். ராணுவம் இந்த முயற்சியைத் தடுத்ததின் விளைவாகப் பலர் கொல்லப்பட்டனர்.

கலகத்தை அடக்க டமாஸ்கஸிலிருந்து துருப்புகள் அனுப்பப்பட்டன.

---

லண்டன், ஏப்ரல் 1

சீனவின் அரிசிஏற்றுமதி கடந்த ஆண்டு 3-ல் 2 பங்கு குறைந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

## டச்சு மறுப்பு

ஆம்ஸ்டர்டாம், ஏப்ரல் 1

மேற்கு சிரியாவிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள வைகியோ என்ற தீவை இந்தோனேஷியப் படைகள் விடுவித்துவிட்டதாய் ஜாகர்த்தாவிலிருந்து அறிவிக்கப்பட்ட ஒரு செய்தியை டச்சு அதிகாரிகள் மறுத்துள்ளனர். ரப்பர் படகுகள்மூலம் இந்தோனேஷியர்கள் கறையிரங்க முயன்றதாயும், ஆனல் டச்சு படைகளைக் கண்டவுடன் ஆயுதங்களைப் போட்டுவிட்டு அவர்கள் ஓட்டம்பிடித்துவிட்டதாயும், பரஸ்பரம் சுட்டத்தின் காரணமாய ஒரு இந்தோனேஷியர் கொல்லப்பட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

## 'யாழ்ப்பாணம் ஆணழகன்' போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணப் பகுதி ஆணழகன் போட்டியில், எஸ்குயர் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. எம். ஏ. தியாகராஜா "திருவாளர் யாழ்ப்பாணமாகத்" தெரிவு செய்யப்பட்டிருக்கிருர். இவர் சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவராவார்.

யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நேன்று மாலை நடைபெற்ற இந்தப்போட்டியில் 20 வாலிபர்கள் கலந்துகொண்டனர்.

வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு:-

சிரேஷ்ட பரிசு

1. எம். ஏ. தியாகராஜா, 2. டி.என். ஞானனந்தம் 3. டி. இம்மானுவேல்.

கனிஷ்ட பிரிவு

1. எஸ். ஞானசபை, 2. எஸ். சகாதேவன், 3. ஏ. டி. ஜெபரத்தினம்.



யாழ்ப்பாணம் ஆணழகன் திரு. எம். ஏ. தியாகராஜா

இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டு நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் பரிசுகளை வழங்கினர். டாக்டர் ராஜசூரியர், உடற்பயிற்சியின் அத்தியாவசிய தேவைகளைப்பற்றி எடுத்துரைத்தார்.

யோகாசனம், சங்கீதம், நடனம் முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கொழும்பிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி

தெல்லிப்பழை, ஞாயிறு

கொழும்பிலிருந்து கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியொன்று திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியுடன் கிரிக்கெட் போட்டியிற் கலந்துகொள்ளுமுகமாக இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது. கொழும்பு செண். அந்தனிஸ் கல்லூரியே யாழ்ப்பாணம் வரலாம் என்று தெரிகிறது.

---

## அல்ஜீரியா

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 1

பிரெஞ்சுத் துருப்புக்கள் மத்திய அல்ஜியர்ஸில் பெரும் பகுதியைத் துண்டித்து ஏராளமான ஆயுதங்களைக் கைப்பற்றியது. சுழல் துப்பாக்கிகளும், 2 லொரிகள் நிறைய ஓ.ஏ.எஸ். துண்டுப் பிரசுரங்களும், ஏராளமான பிளாஸ்டிக் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

மேற்கு அல்ஜீரியாவில் இரு விமானத் தளங்களை ஓ.ஏ.எஸ். பயங்கரவாதிகள் தாக்கினர் என்றும், பிரெஞ்சு துருப்புக்கள் திருப்பித் தாககியதில் ஒருவர் மாண்டார் என்றும், 6 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நேற்று அல்ஜீரியாவில் ஏற்பட்ட சம்பவத்தில் 20 பேர் மாண்டனர். 11 பேர் காயமடைந்தனர்.

## பிரதமர் நேருவுக்கு சுகவீனம்

### 99 டிகிரி ஜுரம்

புதுடில்லி, ஏப்ரல் 1

பிரதம மந்திரி நேருவின் உடல்நிலைபற்றி இன்று விடுக்கப்பட்ட வைத்திய அறிக்கையில் அவருக்கு 99 டிகிரி ஜுரம் கண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. ஜலதோஷமும், தொண்டைக் கட்டும் அவருக்கு இருக்கின்றன. பிரதமர் உற்சாகமாய் இருக்கிருர் என்றும், ஆகாரம் சாப்பிடுகிருர் என்றும், வைத்தியர்களின் ஆலோசனைப்படி அவர் ஓய்வுபெற்று வருகிருர் என்றும் அறிவிக்கப்படுகிறது. சமீபத்தில் சுகவீனமுற்றிருந்த ஜனதிபதி ராஜன் பாபுவும், உள்நாட்டு மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரியும் நேருவைச் சென்று பார்த்தனர்.



## வரி விளம்பரம்

### திருமண அழைப்பு

மணமகன்: திரு க. துரைராசலிங்கம் (தபால் நிலைய அதிபர், வட்டக்கச்சி) மந்துவில்.

மணமகள்: செல்வி. பொ. சந்திரோதயம் (அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரையின் கனிஷ்ட புத்திரி)

காலம்: பிலவவருடம் பங்குனி மாதம் 27ம் நாள் (9-4-62) திங்கட்கிழமைகாலை 9மணி.

இடம்: திருமங்கல்யதாரணம்- செல்வச்சந்நிதி ஆலயம், தொண்டமானாறு
கொண்டாட்டம்:–அலுக்கை, அளவெட்டி.

உறவினரும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

### பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோர்ட்டில்

(1) கச்சாய் அருணாசலம் தம்பிஐயா சிதம்பரப்பிள்ளையும்

(2) பெண் சிதம்பரமும் வழக்காளிகள்

இல: 2078 எதிராக

1. கச்சாய் செல்லம்பரநிருபசிங்கம்

2. அவ்வூர் செல்லையா ஐயும்பிள்ளையும்

3. பெண் செல்லம்மாவும் எதிரிகள்

மேற்சொல்லிய எதிரிகளுக்கு வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப்பகுதி, கரைச்சிப்பற்று

உப்பாறு இறை செண்பகவயல் நெபர் 250. செண்பகவயல் நெபர் 255 சாட்டிய நெபர் 505எல்லை கிழக்குந் தெற்கும் முடிக்குரிய ஆதனம். வடக்கு காலஞ்சென்ற கேசகர் குமரரின் உரித்தாளருக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம் மேற்கு சாம்பசிவம் பெண் ஞானம்பிகைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951ம் ஆண்டின் 16ம் இலக்க பிரிவிடுகல் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தால் உமக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோர்ட்டில் 1962ம் ஆண்டு சித்திரை மீ 16ம்உ 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோர்ட்டாரின் கட்டளைப்படி
ஒப்பம்: P. D. சுவாம்பிள்ளை, சக்கிடுத்தார்.

ஒப்பம்: க. கதிர்காமசேகரா. வழக்காளிகளின் பிறக்றர். 1962ம்ஆண்டு பங்குனிமீ 28உ.

### விற்பனைக்கு

கடை புதிதாக ஆரம்பிப்போருக்கு அருந்தருணம், கடைக்குத் தேவையான 2 பெரிய அலுமாரிகள், ரூக்கைகள், அலுவலக மேசைகள் முதலியன விற்பனைக்குண்டு. மலிவு விலை. தொடர்பு கொள்க. ஆர். என். இராசரத்தினம், லங்கா ரேடிங் கோப்பிறேசன், 31-33, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

### கெய்ரோவில் பென்பெல்லா

கெய்ரோ, பெப். 1
அல்ஜீரிய தேசியத் தலைவர் முகம்மது பென்பெல்லாவும் மற்றும் மூவரும் நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு வந்து சேர்ந்தனர். இவர்களை ஜனாதிபதி நாசர் வரவேற்றார். சுதந்திர அல்ஜீரியாவுக்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்குமுள்ள உறவு பற்றி பென்பெல்லாவும் ஜனாதிபதி நாசரும் பேச்சுவார்த்தை நடத்துவர்.

# சுக்கிரன் ஆராய்ச்சி
## அமெரிக்காவின் திட்டம்

விண்வெளி ஆராய்ச்சிகளுக்காக அமெரிக்கா நடப்பு ஆண்டில் மேலும் 14 விஞ்ஞானச் செயற்கைக் கோள்கள் செலுத்தத் திட்டமிட்டுள்ளது; மேகம் சூழ்ந்துள்ள சுக்கிரன் பற்றி அறிய இந்தக் கோடையில் அனுப்பப்பட இருக்கும் இரு செயற்கைக் கோள்களும் அதில் அடங்கும்.

சுக்கிரன் பற்றிய ஆராய்ச்சிகள் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற இருக்கின்றன. பூமிக்கு மிக அருகில் இருப்பதும், பூமியைப் போலவே சூரியனைச் சுற்றி வருவதுமான ஒரு இயற்கைக் கோள் சுக்கிரன்; அது பூமியிலிருந்து 280 லட்சம் மைல் தூரத்தில் உள்ளது. அமெரிக்கா நடத்தும் சுக்கிர ஆராச்சிகள் அக்கோள் பற்றி இந்நாடு நடத்தும் முதல் நேரடி விஞ்ஞான முயற்சிகளாகும்.

ஏப்ரல் மாதத்தில் அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அடுத்த விஞ்ஞானச் செயற்கைக் கோள் ஒரு பிரிட்டிஷ் கோள் ஆகும்; அதிலுள்ள கருவிகள் பிரிட்டனில் செய்யப்பட்டவையாக இருக்கும். அயனி மண்டலத்தை ஆராய இது அனுப்பப்படுகிறது. பூமியைச் சுற்றிலும் வாயு மண்டலத்திலுள்ள மின்னேறிய அடுக்குகள் தாம் அயனிமண்டலம்; மேற்சொன்ன அடுக்குகள் வானொலி அலைகளைப் பிரதிபலித்து மீண்டும் பூமிக்கே அனுப்புகின்றன. 128 ருத்தல் எடையுள்ள இந்தக் கோளின் பெயர் 'யூ கே.-'; பிரிட்டிஷ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இதை உருவாக்கியுள்ளனர். இது பூமியை 200 மைல் முதல் 600 மைல் உயரத்துக்குள் விண்வெளியில் வலம் வருமாறு அனுப்பப்படும். அமெரிக்காவில் பிளோரிடா மானிலத்திலுள்ள கனவரால் முனையிலிருந்து தார்-டெல்லா ஏவுகணை மூலம் இது விண்வெளியில் செலுத்தப்படும். இந்த ஏவுகணை ஒரு அமெரிக்கத் தயாரிப்பு.

பிற நாடுகளுடன் கூட்டாக அமெரிக்கா நடத்தத் திட்டமிட்டுள்ள பல விண்வெளி விஞ்ஞானக் கூட்டு முயற்சிகளில் முதலாவது முயற்சி 'யூ. கே. -1'. கனடாவில் செய்யப்பட்ட செயற்கைக் கோள் ஒன்று செப்டம்பர் மாதத்தில் அமெரிக்காவின் மேற்குக் கரையிலிருந்து தார் - டெல்டா ஏவுகணை மூலம் விண்வெளியில் செலுத்தப்படும்.

### மேரினர் கோள்

அமெரிக்கா அனுப்பும் கோள்களில் எல்லாம் அதிக எடையுள்ளதும், மிக அதிகமான விஞ்ஞானத் தகவல்கள் பதிவுக் கருவிகளைக் கொண்டதுமான மேரினர் கோள் 1,100 ருத்தல் எடையுள்ளது. சுக்கிரன் பக்கமாக இது சுற்றி வரும்; அதாவது சுக்கிரனிலிருந்து 16,000 மைல் தூரத்தில் இது அதை வலம் வரும். சுக்கிரன் சூரியனைச் சுற்றி வரும் பாதைக்கும், பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதைக்கும் இடையேயுள்ள விண்வெளி பற்றி அது ஆராயும் சுக்கிரனின் சீதோஷ்ணத்தைப் பதிவு செய்யும் நுட்பமான கருவிகள் அதில் உண்டு. சுக்கிரனின் மேல் பரப்பும் அதைச் சுற்றியுள்ள மேக நீராவியும் எதனால் ஆகியவை என்பதை அது கண்டறியும். இரு ஆராய்ச்சிகளுமே சுக்கிரன் அருகில் செல்வனவே ஒழிய, நேராக சுக்கிரனில் போய் இறங்குபவை அல்ல.

சுக்கிரனைச் சுற்றியுள்ள வாயு மண்டலத்தில் தண்ணீர் அல்லது பிராணவாயு அல்லது மேகங்கள் இருப்பதாக ஆதாரம் கிடைத்தால் அது கோளில் உயிர் வாழ்க்கை இருப்பதாகப் புலப்படுத்தும். எனினும், டெலஸ்கோப், ராடார் ஆராய்ச்சிகளிலிருந்து சுக்கிரனின் மேற்பரப்பு மிகவும் உஷ்ணமாக 570 டிகிரி பாரன்ஹீட் இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்; எனவே அங்கு உயிர் வாழ்க்கை அறவே சாத்தியமல்ல என்பது அவர்கள் கருத்து.

(6ம் பக்கம் பார்க்க)

### இன்று உங்கள் பலன்

-சோதிடஆசான்செ.தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித்திங்கள் 20-ந் திகதிதிங்கட்கிழமை (2-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, ஷவ்வால் மாதம் 26-ம் பிறை.

இன்று அபரபட்சதுவாதசி காலை 8-44 வரை. அதன்பின் திரயோதசி. முன்னிரவு 8-56 வரை சதயம். பின்னர் பூரட்டாதி. சித்தயோகம். பிரதோஷவிரதம். இராகு காலம் காலை 7-30 முதல் 9 மணி வரை.

திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூசம் ஆகிய ஆறு நட்சத்திரங்களுக்கும் இன்று படுபட்சி நாள். இத்தினததில் இவர்கள் சுப கருமங்களை மேற்கொள்தலாகாது.

சதயம்—பூரட்டாதி: இவர்களுக்கு இன்று நண்பர்பகை, பிறர்சிந்தனை, உத்தியோக நலம், குடும்பச்சிறப்பு ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: குடும்பசுகம், இனசனபந்துக்களாதரவு, ஏமாற்றம், பிரயாணகஷ்டம், நல்லவர்சந்திப்பு

இடபம்: புதியயோசனைகள், கஷ்டமான பிரயாணம், நம்பி ஏமாறல், செய்தொழில்பலிதம், தாயாதிகளால் கஷ்டம்.

மிதுனம்: குடும்பமகிழ்ச்சி, சுகவாழ்வு, வர்த்தகநன்மை, பிறர்மதிப்பு, உழைப்புக்கு ஊதியம் குறைவு, கவலை.

கடகம்: கடிதத் தொல்லை, சுபசெய்தி கேட்டல், குடும்பக் கலகம், கடும்உழைப்பு, பணமுடை, நம்பி ஏமாற்றம்.

சிங்கம்: தொழில் நன்மை, ஊழியர் உதவி, ஊக்கமுடைமை, பெரியோர்பகை, அவசரநடத்தை, வாக்கு வெற்றி, பணவரவு.

கன்னி: சந்தத் நன்மை, நிம்மதியான வாழவு, மதிப்புக்கு ஆபத்து, நீசர் தொடர்பு, பொருநஷ்டம், கடன்வரவு.

துலாம்: பணமுடை நீக்கம், சுகம், நல்லுறவு, நல்லோர்நட்பு, தனலாபம், உறவினர் பகை, வீண்அபவாதம், சுபகருமம்.

விருச்சிகம்: குடும்பஒற்றுமை, வித்தைலாபம், தனவரவு, குடும்பமதிப்பு, தொழில்தடை, உடல்நலக்கேடு, பொருள் வரவு.

தனு: தொழில்மதிப்பு, வெகு ஆதாயம், குடும்பசச்சரவு, தைரியத்தால் சமாளித்தல், தெய்வவழிபாடு, மாதுருவழி சிந்தனை.

மகரம்: கடும்உழைப்பு, அனுவசிய பணவிவகாரங்கள், பகைவளர்தல், குதர்க்கப்பேச்சுக்கள், சுபசெய்தி கேட்டல், சொற்றிறம்பாமை.

கும்பம்: பிதுருவழிசிந்தனை, வித்தையுயர்ச்சி, அவசரநடத்தையால் பகை, பிறர்நிந்தனை கேட்டல், குடும்பநிம்மதி, பெரியோர் தொடர்பு.

மீனம்: உத்தியோக பதவியுயர்ச்சி, தொழில்நன்மை, நல்லோர் நட்பு, முயற்சிவெற்றி, கடும்உழைப்பு, தேக ஆரோக்கியம், சுபசெய்தி.

அம்மா எனக்கு தினந்தோறும் மாமைட் தருகிறதால், வகுப்பிலும் விளையாட்டுக் களத்திலும் நான் சுறுசுறுப்பாய் இருக்கிறேன்



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெறும் உள்ளவர்களாய்இருக்கிறோம. பலத்திற்கும வீர்யத்திற்கும்உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒரு பாகமாக நீங்கள் மாமைட்டை தினசரி அருந்தி வரவேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானுல் கொஞ்சம் எலுமிச்சம் பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைடடை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சுப் கறி முதலியவற்றில சேர்க்கும போழுது அதிகப்படியானருசியை மட்டுமின்றி உங்கள தினசரி ஆகாரத்தைச் சமைக்கும் பொழுது தேவையான விட்டமின பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

# உலக சுகாதார தினம் ஏப்ரல் 7-ம் திகதி நடைபெறும்

நியூயார்க், மார்ச் 31

பொதுமக்கள் சுகாதார திட்டங்களுக்குப் பெருமளவு தொகையான பணத்தை ஒதுக்கும்படி, பின்தங்கிய நாடுகள் தமது அரசாங்கங்களிடம் கோர வேண்டும்.

இவ்வாறு ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற விருந்து ஒன்றில் கலந்து கொண்ட சுகாதார அதிகாரிகள் சிலர் கூறினர்.

ஏப்ரல் 7-ந் திகதி நடைபெறவிருக்கும் சுகாதார தினத்தில் பொது மக்கள் பங்கு பற்றிக் கொள்வது முக்கிய அம்சம் எனவும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவில் ஏப்ரல் 7-ம் திகதி சுகாதார தினமாகக் கொண்டாடப்படவிருக்கிறது. கண் வியாதிகள் தடுப்பு, குருடர்கள் விமோசனம் என்னும் ரீதியில் இவ்வருட சுகாதார தினம் கொண்டாடப்படுகிறது.

குருடர்களுக்கு விமோசனம் அளிப்பதுபற்றி அரசாங்கங்கள் அக்கறை எடுத்தால் உலகத்திலுள்ள சுமார் ஒரு கோடி குருடர்களுக்கு உதவியாக இருக்கும் என அமெரிக்க பொது மக்கள் சுகாதார சேவையின் சர்வதேசக் கிளைத் தலைவர் டாக்டர் ஜேம்ஸ் வாட் கூறியுள்ளார்.

## கீல்வாயு ஏற்படக் காரணம் என்ன ?

டாட், ஏப்ரல் 1

உடல்கூறு சாஸ்திரத் துறையில் கண்டுபிடிக்கப்பட்ட புது விவரங்களிலிருந்து வைத்தியத்துறையில் புதுமுறைகள் ஏற்பட வழி ஏற்பட்டுள்ளன. மனிதர்கள், பிராணிகளது இரைப்பைகளின் பக்கச்சுவர்கள் ஜீரணமாகாத மிக நுண்ணிய உணவுப் பொருளையும் உள்ளே அனுமதிக்கிறது என்கிற உண்மையை மேற்கு ஜெர்மன் பிரபல டாக்டரும் உடல்கூறு சாஸ்திர நிபுணருமான டாக்டர் வோல்கீமர் நீண்டகால ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடித்திருக்கிறார்.

உணவுப் பொருளை உட்கொண்டால் அது பலவகை ரஸங்களால் கரைக்கப்பட்டு, கரைந்த பகுதி ரத்தத்துடனும் கரையாத பகுதி சிறுகுடலுக்கும் தள்ளப்படும் என்பதுதான் இதுவரை எல்லாருக்கும் தெரிந்திருந்த செய்தி ஜீரணமாகாத உணவில் நுண்ணிய பாகம் இரைப்பைக்குள் செல்லக்கூடியது என்பது பற்றி யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

வோல்கீமர், முதலில் பன்றிகள், ஆடுகள், நாய்கள் இவைகளைக் கொண்டு தன் ஆராய்ச்சிகளைச் செய்தார். பின்னர் தாங்களாகவே வலுவில் பரிசோதனைக்குட்பட்ட மனிதர்களிடமும் சோதனைகளை நடத்தினார். உருளைக்கிழங்கு, சோளம் இவைகளிலுள்ள "ஸ்டார்ச்" பொருளையும் ரொட்டி தயாரிக்க உபயோகிக்கப்படும் "ஈஸ்ட்" என்ற பொருளையும் தண்ணீரிலும், பாலிலும்கலந்து அவர் கொடுத்து ஆராய்ந்தார். இதன் மூலம் அவர் கண்டுபிடித்த முடிவுகள் பிரமிக்க வைப்பதாக இருந்தன. கோடிக்கணக்கான "ஸ்டார்ச்" நுண்ணிய பாகங்களில் ஒன்று அல்லது இரண்டு இரைப்பைக்குள் நுழைந்துவிடுகிறது என்பதே இவர் கண்டுபிடித்த விஷயம். இந் நுண்ணிய பொருள் இரைப்பையிலும் அதற்குப் பிற்பாடும் எவ்வித மாற்றத்தையும் அடைவதில்லை. இது முடிவில் இருமலின் போது கபத்துடனே அல்லது வெளிப்படும் சிறுநீருடனே வெளியேறிவிடுகிறது.

டாக்டர் வோல்கீமரின் இந்த ஆராய்ச்சிகள் குறித்து ஜெர்மனியிலுள்ள வைத்திய சஞ்சிகைகள் விவரமாகக்குறிப்பிட்டு எழுதியுள்ளன. ஆராய்ச்சியைமேலும்தொடர்ந்துநடத்துவதற்கான ஒரு விஷயத்தைக் கொடுத்தவர் வோல்கீமர் என்று அவை பாராட்டியுள்ளன.

பிரபல பெர்லின் டாக்டரும் வைத்திய சஞ்சிகையின் ஆசிரியருமான டாக்டர் குனே இது பற்றிக் கூறுகையில் எப்படி நன்றாக வேலைசெய்யும் இயந்திரத்தினுள் மணல்சேர்ந்துவிட்டால் கெடுதி ஏற்படுமோ அதேபோல் உடலிலுள்ள இரத்த ஓட்டத்தில் ஜீரணமாகாத உணவுப்பொருள் அணுக்கள் சேர்ந்தால் ஆபத்துக்கள் ஏற்படலாமென்று கூறுகிறார். ஒருவேளை அஜீரணக் கோளாறுகள் பலஏற்படுவதற்கு இது காரணமாக இருக்கலாமெனவும் இவர் கருதுகிறார். கீல்வாயுபோன்ற நோய்கள்ஏற்பட இதுதான் காரணமாக இருக்கலாம் என்பதும் இவர் கருத்து.

போஷாக்குக்குறைவாக உள்ளவர்கள் விஷயத்தில் ஜீரணமாகாத உணவுப் பொருளின் நுண்ணிய பாகங்கள் அதிகமாக ரத்தத்தில் கலப்பதாக இருக்கலாமென்பதையும் வோல்கீமர் கண்டுபிடித்திருக்கிறார்.

தவறான உணவுகளை உட்கொள்வது, உணவுச்சத்துகள் போதிய அளவில் இல்லாமலிருப்பது இவை காரணமாக பலவித நோய்கள் ஏற்பட இடமுண்டாகிறது என்பது இப்போது தெரிய வருகிறது! மனிதகுல நன்மைக்காகமேலும் இத்துறையில் ஆராய்ச்சிகளை டாக்டர் வோல்கீமரும் அவருடைய சகாக்களும் செய்துவருகின்றனர்.

# பாகிஸ்தானில் அணுசக்தி நிலையங்கள் நிறுவத் திட்டம்

கராச்சி, மார்ச் 31

பாகிஸ்தானில் அணுசக்தி நிலையங்களை அமைப்பதில் பாகிஸ்தானுக்கு உதவி புரியும் சாத்தியங்கள் பற்றி ஆராய்வதற்காக மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஐந்து பேர் கொண்ட அணுசக்தி நிபுணர்களின் தூது கோஷ்டியொன்று கராச்சி வந்துள்ளது.

மேற்கு ஜெர்மன் உதவியளிப்பது சம்பந்தமாக ஜெர்மனிக்கும் பாகிஸ்தானுக்கும் உடன்பாடு ஏற்பட்டால் அணுசக்தி நிலையமொன்று கிழக்குப் பாகிஸ்தானில் நிறுவப்படுமென்று தெரிய வருகிறது.

பாகிஸ்தானில் அணுசக்தி நிலையங்கள் நிறுவுவதற்கு உதவி செய்ய அமெரிக்காவும் பிரிட்டனும் ஆர்வம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது. அணுசக்தி நிலையங்கள்மூலம் பாகிஸ்தானில் குறைந்த செலவில் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமென்று அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்திருந்தனர்.

# ரஷ்ய, பிரிட்டிஷ் வாதநோய்தடுப்பு மருந்து

## இரண்டும் நல்லதே என்கிறார் வைத்திய அதிகாரி

கொழும்பு, ஞாயிறு

'ரஷ்ய வாதநோய் தடுப்ப மருந்து நல்லதா அல்லது பிரிட்டிஷ் மருந்து நல்லதா என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது. சிலர் பிரிட்டிஷ் மருந்தைவிட ரஷ்யமருந்து நூறுமடங்கு திறம்என்று கூறி அந்த மருந்தையே தமக்குத் தரும்படியும் கேட்கிறார்கள். ஆனால் உண்மை இதுவல்ல. ஊட்டமருந்து எங்கு தயாரிக்கப்பட்டாலும் எந்த வகையில் அது உட்கொள்ளப்பட்டாலும் ஒன்றைவிட மற்றது திறமானது என எவரும் கூறிவிடமுடியாது.'

இவ்வாறு பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா தெரிவித்துள்ளார்.

டாக்டர் நடராஜா மேலும் தெரிவித்ததாவது:

'ரஷ்ய ஊட்டமருந்தும் பிரிட்டிஷ் ஊட்டமருந்தும் இளம்பிள்ளை வாதநோயைப் பரவாது தடுக்கும் சக்தியைப் பெற்றுள்ளன. இரண்டுக்கும் உள்ள வித்தியாசமென்னவெனில் ரஷ்ய மருந்துவில்லைகளாக உள்ளன. பிரிட்டிஷ் மருந்து குடிக்கக்கூடியமுறையிலிருக்கிறது.

பலருக்கு தடுப்பு மருந்து கொடுக்கும்போது வில்லைகளாக வழங்குவது இலேசாக இருக்கும். குழந்தைகள் விஷயத்தில் இது சாத்தியமாகாதிருக்கலாம். குழந்தைகளுக்கு பிரிட்டிஷ் மருந்தே ஏற்றதாகவிருக்கிறது. ஏனெனில் இந்த மருந்தை அவர்கள் குடிக்க இலகுவாக இருக்கும்.

அமெரிக்க டாக்டர் அல்பேர்ட் பி. சாபின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முறையிலேயே இந்தஇரு மருந்துகளும்தயாரிக்கப்படுகின்றன.

## பர்மிய சுப்ரீம் கோர்ட் கலைக்கப்பட்டது

ரங்கூன், மார்ச் 31

பர்மாவில் யூ நூ அரசாங்கத்தைக் கவிழ்தது ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ஜெனரல் நீவினின் புரட்சிச் சபை பர்மாவின் உயர் நீதிமன்றத்தையும், சுப்ரீம் நீதிமன்றத்தையும் கலைத்துவிட்டது. ஒன்பது நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்தது. புரட்சி நடைபெற்ற காலத்திலிருந்து பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள பிரதம நீதியரசரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவர்.

பிரதம நீதிமன்றம் ஒன்றை ஜெனரல் நீவின் அமைத்துள்ளதுடன் அதற்கு ஆறு நீதிபதிகளையும் நியமித்துள்ளார்.

## சுகர்ணோ லண்டன் செல்வார்

லண்டன், மார்ச் 31

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணோவை பிரிட்டனுக்கு விஜயம் செய்யுமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் விடுத்த அழைப்பை டாக்டர் சுகர்ணோ ஏற்றுக் கொண்டார் அவர் மே மாதம் 8ந் திகதி லண்டன் செல்வார்.

## கோவாவில் ரூபாய் மதிப்பில் கணக்குகள்

பஞ்சிம், மார்ச் 31

ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் கோவா வட்டாரத்தில் கணக்குகள் எல்லாம் ரூபாய் விகிதக் கணக்கில் எழுதப்படவேண்டுமென கோவா ராணுவ கவர்னர் அறிவித்துள்ளார். இதுவரை போர்த்துக்கீய நாணய விகிதத்தில் எழுதப்பட்டன.

## மின்னல் தாக்கி 18 பேர் பலி

திருவனந்தபுரம், மார்ச் 31

கேரளத்தில் கடந்த ஒரு வார காலத்தில் மின்னல் தாக்கி 18 பேர் கொல்லப்பட்டனர். தந்தைமடியில் தவழ்ந்த இரண்டுவயதுக் குழந்தை மின்னல் தாக்கி தகப்பனின் மடியை அணைத்தவாறே இறந்தது மிகவும் பரிதாபமானதாகும்.

ப்ளோரிடா, மார்ச். 31

கியூபா விமானம் ஒன்று கவிழ்ந்து 22 பேர் கொல்லப்பட்டனர். இவ் விமானம் கடலில் நொருங்கிவிழ்ந்ததாகவும் இதில் இருந்த 22 பேர் இறந்துவிட்டனர் எனவும் அறிவிக்கப்பட்டது.

## அலுப்புத்தட்டும் புகழ் பெற்ற நூல்

பம்பாய், மார்ச். 31

"எனது புகழ்பெற்ற நாவலான 'குட் ஏர்த்' (நல்ல பூமி) இப்போது எனக்கே பெரும் அலுப்புத்தட்டுகின்றது." இவ்வாறு நோபெல் பரிசுபெற்ற திருமதி பேர்ள் பக் கூறினர். இக் காரணம் பற்றியே பல ஆண்டுகளாகத்தாம் இந் நாவலைப் படிப்பதில்லையெனவும் அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

## எடின்பரோ கோமகன்

புவனஸ்அயர்ஸ், மார்ச் 31

அர்ஜன்டைனாவிலிருந்து எடின்பரோ கோமகன் தமது பிரயாணத்திற் குறிப்பிடப்பட்டதற்கு நான்கு நாட்கள் முன்னதாகவே புறப்பட்டுவிட்டார்.

# உள்நாட்டுப் பொருள்களை உபயோகிக்கவேண்டும்

## மந்திரிகளுக்கு பிரதமர் கடிதம்

கொழும்பு, ஞாயிறு

அரசாங்க இலாகாக்களுக்கோ கூட்டு ஸ்தாபனங்களுக்கோ தேவையான தளபாடங்கள் மற்றும் பொருள்களை பொருளாதாரத்தை உத்தேசித்தும் உள்நாட்டில் கைத்தொழில்களை ஊக்குவிக்குமுகமாகவும் உள்நாட்டுப் பொருள்களையே உபயோகிக்கும்படி தனது மந்திரிகளுக்குப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

சமீபத்தில் தனது மந்திரிகளுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

ஒரு கூட்டு ஸ்தாபனம், தனது சபை அறையில் விரிப்பதற்காக வெளிநாட்டிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கம்பளங்களை வாங்குவதற்கு முயற்சி செய்ததாக எனக்குத் தகவல் கிடைத்தது. இந்தச் செய்கை நாட்டின் பொருளாதார நிலைமையை உதாசீனம் செய்வதுமல்லாமல் இன்றைய பொருளாதார நிலைமையையும் அந்நிய செலாவணியையும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளில் நம்மை பாதுகாத்துக் கொள்ளவும் முடியாமலிருக்கிறது.

செலவினங்களுக்காக பார்லிமெண்ட் நிதி ஒதுக்கியபோதிலும் அந்த நிதியை நாம் சாத்தியமான அளவு நமது உள்நாட்டுக் கைத்தொழிலை வளர்க்க உபயோகப்படுத்தவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சில சமயங்களில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களைவிடத் தரத்தில் குறைந்தவைகளாக இருக்கலாம். ஆனாலும் உள்நாட்டுப் பொருள்களை உபயோகிப்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

# ஜெனீவா மகாநாடு முறிந்து விடுமா?

## அணு ஆயுத சோதனை பற்றி அமெரிக்கா ஆலோசனை

வாஷிங்டன், ஏப். 1

பூமிக்கு மேல் வானவெளியில் அணு ஆயுதங்களைப் பரிசோதனை செய்வது சம்பந்தமாக அமெரிக்க அதிகாரிகள் ஆலோசனை செய்துவருகின்றனர்.

அணு ஆயுதசோதனைத்தடை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு சோவியத் யூனியன் சம்மதிக்காவிட்டால் பூமிக்குமேல் அணு ஆயுதங்களைப் பரீட்சிப்பதில் அமெரிக்கா ஈடுபடும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது.

ஜெனிவாவில் படைகுறைப்பு மகாநாடு நடைபெறுவதால் மகாநாடு முடிவடையும்வரை அணுசக்தி வல்லரசுகள் அணு ஆயுத பரிசோதனைகளை நிறுத்திவைக்கவேண்டுமென்று இந்தியா கேட்டிருந்தது.

அணுஆயுத பரிசோதனைகளை அமெரிக்கா ஆரம்பித்தால் ஜெனிவா மகாநாடு முறிந்து விடுமென அஞ்சப்படுகிறது.

## நிறத்தவர்களையே பாதிக்கும்

### பிரிட்டிஷ் சட்டம்பற்றி பிரதமர் நேரு

புதுடில்லி, மார்ச் 31

"காமன்வெல்த் நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் சட்டமொன்றை பிரிட்டன் நிறைவேற்றியதற்காககாமன்வெல்த்திலிருந்து இந்தியா விலகிவிடப்போவதில்லை. நாங்கள் காமன்வெல்த்திலிருந்து விலகலாம்; விலகாமல் விடலாம். ஆனால் காமன்வெல்த்திலிருந்து விலகுவதானால் இது போன்ற சிறியவிஷயங்களுக்காக இருக்காது. இதைவிடப் பெரிய விஷயமாகவே இருக்கும்" என்று பிரதமர் திரு. நேரு கூறினார்.

'காமன்வெல்த் நாடுகளிலிருந்து பிரிட்டனில் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் சட்டத்துக்கும் இன ஒதுக்கலுக்கும் தொடர்பில்லையென்று பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்தபோதிலும், நடைமுறையில் இச் சட்டம் நிறத்தவர்களையே பாதிக்கும்" என்று பிரதமர் நேரு கூறினார்.

## லோக்சபை 16-ந்திகதி கூடும்

புதுடில்லி, ஏப். 1

இந்தியக் குடியரசின் புதிய பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் இம்மாதம் 16-ந் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொள்வர். 17-ந் திகதி சபை கூடி சபாநாயகர், உதவி சபாநாயகர் ஆகியோரைத் தெரிவு செய்துகொள்வர். 18-ந் திகதி புதிய பார்லிமெண்டை ராஷ்டிரபதி திறந்துவைத்து இருசபைகளினதும கலப்புக் கூடடத்தில் உரை நிகழ்த்துவார்.

## காஷ்மீர்பற்றி அமெரிக்கமந்திரி

நியூயோர்க் மார். 31

காஷ்மீர் பிரச்னையில் பெரும் வல்லரசுகளின் நலனும் சம்பந்தப்பட்டுள்ளதென்று அமெரிக்க உதவி ராஜாங்க மந்திரி திரு. ஜோர்ஜ் போல் தெரிவித்தார்.

## மணி வாக்கு

"கடமை என்பது நல்லவற்றைச் செய்வது மாத்திரமன்று. கெட்டவற்றை எதிர்த்துப் போராடுவதுமாகும். அப்போதுதான் நல்லவற்றைக் காப்பாற்ற முடியும்."

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 20 உ (2-4-62)

## சிரியாவில் புரட்சி

சிரியாவில் இரண்டாவது தடவையாக ராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கின்றது. ஈராக்கில் ராணுவ ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து சிரியாவிலும் எழுந்துள்ள இக்கிளர்ச்சி பேரதிர்ச்சியை உண்டாக்குவதாகும். ஏனெனில் இக்கிளர்ச்சி காரணமாக மத்திய கிழக்கு நாடுகளிடையே புதிய நெருக்கடிகள் ஏற்பட இடமுண்டு இதனால் உலக சமாதானத்துக்கு ஆபத்து நேரிடவும் கூடும்.

சமீப காலத்தில் ராணுவப் புரட்சி ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மிக வேகமாகப் பரவி வருவதைக் காண்கின்றோம். எகிப்து, சூடான், ஈராக், பாகிஸ்தான், பர்மா ஆகிய நாடுகளும் ராணுவ ஆட்சிக்குள் சிக்குண்டு தவிக்கின்றன. நல்லவேளையாக இலங்கையில் ஏற்படவிருந்த புரட்சியை அரசினர் முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டனர். இச்செயல் உண்மையாகவே பாராட்டற்குரியது.

இப்படியெல்லாம் ராணுவத்தினர் குறுக்கிட்டு, ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றுவதற்கு அந்நாடுகளிலுள்ள அரசியல் தலைவர்களும், பார்லிமெண்ட் அங்கத்தினரும் சுயநலத்தை மேற்கொண்டிருப்பதே காரணமெனக் கூறப்படுகிறது. இக்குற்றச்சாட்டை ராணுவத்தினரே சுமத்துகின்றனர். இதில் ஓரளவு உண்மை இருந்தாலும், ராணுவத்தினருக்கு இருந்தாற்போலிருந்து பொது மக்களின் நல்வாழ்வில் அக்கறை ஏற்பட்டுவிடுகின்றதென்பதை நம்ப முடியாது. ஒரு சில ராணுவ அதிகாரிகளின் சர்வாதிகாரத் திமிரே இத்தகைய புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும் அடிப்படையான காரணமெனலாம்.

ஆனால், சிரியாவின் நிலையோ மிகவும் விசித்திரமானதொன்றெனக் கூறவேண்டும் இங்கு முறையாகத் தெரிவு செய்யப்பெற்று ஆட்சிபீடத்தில் அமர்ந்த மந்திரியை நீக்கிவிட்டு ஆட்சிப் பொறுப்பை ராணுவம் மேற்கொண்டிருக்கின்றது. இப்படியான நிலைமை ஏற்படுவதற்குக் காரணமென்ன? ஈராகுடன் சிரியா தொடர்பு கொண்டிருப்பதும் ராணுவத் தலைவர்களுக்குப் பிடியாதிருக்கலாம் புதிய அரசாங்கம் சர்வதேச அரசியலில் நடுநிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்குமெனத் தெரிகின்றது. அத்துடன் எகிப்து, ஈராக் ஆகிய நாடுகளுடன் நல்லுறவு வைத்துக் கொள்ளுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

சிரியா வளம் மிகுந்த ஒரு நாடாகும். இங்கு 45 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். தொழில் துறையில் விருத்தியடைந்துள்ள இந்நாட்டில் ராணுவ ஆட்சி எத்தகைய விளைவுகளை உண்டாக்குமோ தெரியவில்லை.

எவ்வாறாயினும் பொது மக்கள் ராணுவ ஆட்சிக்கு ஆதரவளிப்பது தாமே ஆபத்தைத் தேடிக்கொள்வது போலாகும்.

சென்னைக் கடிதம்

# தமிழ்நாட்டில் நாடக முன்னேற்றம்

## சென்னை நாட்டிய சங்கப்பணி

### கண்டிய நடனக் குழு

— நமது நிருபர் —

சென்னை, மார்ச் 28

"மழைவிட்டும் தூவானம் விட வில்லை" என்பது போல, தமிழ் நாட்டுப்பொதுத் தேர்தல் எல்லாம் முடிந்து சட்டசபை கூடப்போகும் சமயமானாலும் கட்சிச் சண்டைகளும் போட்டிப் பேச்சுக்களும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. தேர்தலில் வெற்றி பெற்ற பிரதிநிதிகளுக்கு வெற்றி விழாக்களும், ஊர்வலங்களும் இன்னும் நடந்து கொண்டேயிருக்கின்றன. ஒவ்வொரு கட்சியும் "நன்றியறிவிப்புக் கூட்டம்" என்ற பெயரில் (தேர்தல் பிரசாரக் கூட்டம் போலவே) பொதுக் கூட்டங்கள் நடத்தி வருகின்றன. சில சமயங்களில் இக்கூட்டங்களில், தோல்வியடைந்த அபேட்சகர்களும் வாக்காளர்களுக்கு "நன்றி" தெரிவித்துவிட்டு, எதிர்க் கட்சிகளுக்கு சூடு பறக்க வசைமாரி பெய்வதுமுண்டு!

சமீபத்தில் சென்னை கடற்கரையில் நடந்த ஒரு தி. மு. க. பொதுக்கூட்டத்தில் ஒரு அங்கத்தவர் "கல்லை விட்டெறியுங்கள்" என்று தன் உணர்ச்சியைக் கக்கிவிட்டது, தி. மு. க. பிரமுகர்களையும் அபிமானிகளையும் எவ்வளவோ கவலைக்குள்ளாக்கிவிட்டிருக்கிறது. நல்ல சிறப்போடு பெருமளவில் ஸ்தானங்களைத் தமிழ்நாட்டு சட்டசபையில் தி. மு. க. பெற்றிருக்கும்போது, அதன் வருங்காலப் பேச்சாலும் செயலாலும் தான் மற்றைய ராஜ்யங்களிலுள்ள எதிர்க்கட்சிகளின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற வேண்டும். ஆகையால் கழகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் கொஞ்சம் மிதமாகவே பேசுவது நல்லது என்று மேலிடத்திலிருந்து ஆணைபிறப்பிக்கப் பட்டிருக்கிறதாக அறிகிறோம்.

இந்த விஷயத்தில் தி. மு. க. பொதுச் செயலாளரும் தலைவருமாகிய திரு. சி. என். அண்ணாத்துரை காஞ்சீபுரத்தில் எதிர்பாராத வகையில் தோல்வியடைந்தும் கூடத் தமது பேச்சில் அடக்கத்தையும் கௌரவத்தையும் கடைப்பிடிக்கத் தவறவில்லை. ஒவ்வொரு கூட்டத்திலும் திரு. அண்ணாத்துரையின் பேச்சு சம்பிரதாயத்தையும் பண்பாட்டையும் மீறாமல் இருந்து வருவதை காங்கிரஸ் த[illegible]வர்களே மதித்து வருகின்றனர்.

ஆளும் கட்சியும் ஆளப்போகும் கட்சியுமாகிய காங்கிரஸ் நடத்தும் சில "நன்றியறிவிப்பு"க் கூட்டங்களிலும் தி. மு. க. வின் "கல்லெறி புராண"த்தைப் பற்றி இன்னும் பேசப்பட்டே வருகிறது. இந்தச் சம்பவம் நிகழ்ந்து பல நாளாகிவிட்டதால் எல்லாரும் இதைப்பற்றி மறந்து விடுவதுதான் நல்லது. ஆனால், வெற்றியில் களிப்பும் தோல்வியில் கசப்பும் கொண்டவர்களுக்கு சிறு விஷயங்களும் பிரமாதமாகத் தான் படும்.

### 'உலக நாடகதினம்'

இலங்கையிலே இப்போது தமிழ் நாடகத்துக்குப் புத்துயிரளிக்க ஏற்பட்டிருக்கும் புதிய இயக்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இங்கு தமிழ் நாட்டில் நாடகத்துறை அகில உலக எல்லையில் வளர்க்கப்படுகிறதென்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைவார்கள். அமெச்சூர் நாடக மன்றங்களுக்குக் கணக்கில்லை. ஒவ்வொரு மன்றமும் மணி மணியான நாடகம் நல்ல வருமானத்தோடு மேடையேற்றி வருகின்றது. "பாரதீய நாட்டிய சங்கம்" என்ற அகில இந்திய கலைச் சங்கத்தின் ஆதரவு பெருமளவில் கிடைக்கிறது. அடிக்கடி உலகப் பேரறிஞர்களால் பேச்சுக்களும், நாடகப் பயிற்சியும் நடத்தப்படுகிறது.

கடந்த 27-ம் தேதி "உலக நாடகதினம்" இங்கு சென்னையிலும் கொண்டாடப்பட்டது. சர்வதேச கலாச்சார சபையின் நாடகத்துறை உட்சபையின் நோக்கத்தோடு உலக மடங்கிலும் மார்ச் 27-ம் தேதியை "நாடகதினமா"கக் கொண்டாட எல்லாத் தேசங்களும் உடன்பட்டிருக்கின்றன. இந்தியாவில் புதுடில்லியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "பாரதீய நாட்டிய சங்கம்" நாடு முழுவதும் நாடகதினம் கொண்டாடப்பட வேண்டும் என்று ஒவ்வொரு பிராந்தியத்திலுமுள்ள சங்கங்களையும் வேண்டிக் கொள்ள சென்னையில் நேற்று மிகச் சிறந்த ஒரு விழா நடைபெற்றது.

இந்த "சென்னை நாட்டிய சங்கம்" என்ற கலைச் சங்கத்தின் தலைவராயிருப்பவர் பல்கலைக் கழக சமஸ்கிருதப் பேராசிரியர் டாக்டர் வி. ராகவன். இந்திய கலாசாரத்தின் இன் கலைகளாகிய நாடகம், நாட்டியம், இசை, ஓவியம் முதலியன நாட்டின் நாற்றிசைகளிலும் பரவியதற்கு வாய்ப்பளித்தது சமஸ்கிருத மொழி. டாக்டர் ராகவன் அந்த இன்கலைகளையெல்லாம் வட மொழியிலிருந்து தமிழுக்கும் தமிழருக்கும் பயன்படச் செய்வதற்கு அயராது உழைத்து வருபவர். இன்று தமிழ்நாட்டில் கர்நாடக சங்கீதமும் பரத நாட்டியமும் உச்சநிலைக்கு மீண்டும் பவளர்ந்திருப்பதற்கு டாக்டர் ராகவனின் சேவைதான் முக்கியம் என்று சொல்லலாம். சென்னை மியூசிக் அகாடமியின் காரியதரிசியாயிருந்து அந்த ஸ்தாபனத்தின்மூலம் மரபு தவறாத கர்நாடக இசையையும் பரதநாட்டியத்தையும் தமிழ் மக்கள் அனுபவிக்கச் செய்பவர் அவர். சமீபத்தில் இவருக்கு ஜனாதிபதி "பத்ம பூஷணம்" என்ற பட்டமளித்துக் கௌரவப்படுத்தினர்.

டாக்டர் ராகவனுடன் அமெச்சூர் நாடகத்துறையில் பல காலம் உழைத்து வரும் சிலரும் சேர்ந்து இந்த உலக நாடகதினத்தைக் கொண்டாடினார்கள்.

### மாதிரி நாடகங்கள்

சென்னையிலுள்ள அமெச்சூர் நாடக சபைகள் பெரும்பாலும் தமிழ் நாடகங்களே நடத்தி வந்தாலும், சில சபைகள் ஆங்கில நாடகங்களும் மிக நல்லமுறையில் நடத்துகின்றன. சென்னை நாட்டிய சங்கத்தினர் வெளிநாட்டிலிருந்து பல நாடக உறுப்பினர்களை அழைப்பித்து "மாதிரி நாடகங்கள்" மேடையேற்றி வைப்பதும், சிறந்த அனுபவஸ்தர்களைக் கொண்டு நாடகம் சம்பந்தமாகச் சொற்பொழிவுகள் நடத்துவதும் இங்கு அடிக்கடி நிகழும் நிகழ்ச்சி. தமிழ் நாட்டிலுள்ள அமெச்சூர் நாடக சபையினர் உலகத்தின் சிறந்த நாடகக் குழுக்களையும் நடிகர்களையும் நேரில் பார்த்து அவர்களிடம் சிறந்த அம்சங்களைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

### கண்டி நடனம்

இந்த உலக நாடகதினக் கொண்டாட்டத்தை யொட்டி, சென்னை மக்கள் நேற்றைய தினம் இலங்கையின் பூர்விகக் கலைகளில் ஒன்றாகிய கண்டிய நடனத்தைக் கண்டு களிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இலங்கையில் பல ஆண்டுகளாகவே நாட்டியக் கலையில் புகழீட்டிய ஸ்ரீமதி ரஞ்சனா தங்கராஜா பல வருடங்களுக்கு முன்பு அண்ணாமலை மன்றத்தில் பரத நாட்டியக் கச்சேரி செய்ததைச் சென்னைவாசிகள் கண்டு களித்தவர்கள். இப்போது இவர் மிகப்பெரிய ஒரு குழுவுடன் கண்டிய நடனமும் சேர்ந்த காட்சிகளை இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஆடிக் காண்பிக்க ஒரு கலைத்தூதுவராக வந்துள்ளார். ஸ்ரீமதி ரஞ்சனாவின் இயல்பாயமைந்த கலையார்வமும் பரதநாட்டியத்தில் ஊறித் திளைத்த அனுபவமும் அவரது கோஷ்டியின் வெற்றிக்கு வழியமைக்கும் என்று நம்பலாம். பம்பாயிலுள்ள "கலைப் பெண்கள் சங்கம்" என்ற ஒரு ஸ்தாபனத்தாரின் அழைப்பின் பேரில் இச்சுற்றுப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீமதி ரஞ்சனாவை சென்னை ரசிகர்கள் வாழ்த்தினார்கள்.

இப்படியான ஒரு சூழ்நிலை எந்த நாட்டிலும் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்வது, அந்நாடுகளிலுள்ள தலைவர்களின் கடமையாகும்.

---

## மேயரின் யோசனை

சினிமாக் காட்சிகள் இரவு 11 மணிக்குப் பின்னர் நடைபெறுவது திருந்திய நல்வாழ்வுக்கு உகந்ததல்ல என்ற கருத்தைச் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சினிமா ரசிகர் கூட்டமொன்றில் யாழ்ப்பாணம் மேயர் தெரிவித்திருக்கின்றார். சினிமாவைப் பார்த்துவிட்டு நடுநிசியில் தெருவோரங்களிலும், திண்ணையிலும் தூங்குவது சுகாதாரத்துக்கோ அல்லது நகரின் அமைதிக்கோ ஏற்றதல்லவென்பது உண்மைதான். பகல் முழுவதும் உழைத்துவிட்டு நன்றாக உறங்கவேண்டிய எத்தனையோ தொழிலாளர் இரவில் இரண்டாவது காட்சிக்கே தியேட்டர்களுக்குச் செல்கின்றனர். படம் முடிந்து வீட்டுக்குச் செல்லும் வழியில் இவர்களுக்கிடையே வீண் பேச்சுவார்த்தைகள் எழுந்து சண்டையில் முடிவதும் உண்டு. இதனால் சத்தமும் சந்தடியும் உண்டாகி அக்கம்பக்கத்திலுள்ளவர்களும் கிரமத்துக்குள்ளாகின்றனர் படம் பார்க்கச் செல்லும் ஏனைய சினிமா ரசிகர்களும் இச்சச்சரவுகளால் பாதிக்கப்படுகின்றனர். திருட்டு முதலிய ஏனைய குற்றங்களிலிருந்து அதிமாலேனோர் விடுதலையாவதற்கும் அந்த யோசனை சிறந்ததாக இருக்கும்.

அதிக தூரத்திலிருந்து வருபவர்களுக்கு இரவு பத்தரை மணிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் பஸ் வசதி கிடைப்பதில்லை. இவர்களில் அநேகர் படம் பார்த்துவிட்டு பஸ் நிலையத்திலும் கடை விறாந்தைகளிலும் தூங்குவது சமூகத்துக்கே இழுக்குத் தருவதாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனித்தே யாழ்ப்பாணம் மேயர் அனைவரும் வீட்டில் படுத்துறங்கவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியுள்ளார் இப்படியான நல்ல மாற்றம் ஏற்படுவது அவர் கருதுவதுபோலவே திருந்திய சுகவாழ்வுக்கு வழிவகுப்பதாகும். அரசினரும் தியேட்டர் நிர்வாகிகளும் இதனைக் கருத்திற் கொண்டு எல்லாருக்கும் ஏற்ற வகையில் மாற்றங்கள் செய்வது நல்லதென்றே தோன்றுகிறது.

## பிரதமர் அடெளலா முதிர்ந்த ராஜதந்திரி

—(திரு. லூயிஸ் ஹலால்)—

அண்மையில் அமெரிக்காவுக்கும், ஐ. நா. வுக்கும் ஒருவார விஜயம் செய்த காங்கோ பிரதமர் சிரில் அடெளலா முதிர்ந்த இராஜதந்திரியாக சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றார். சிறிய மீசையையும் புன்னகையையும் கொண்ட அந்தக் குட்டையான ஆபிரிக்க பிரமுகர், பதினொருவது பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்றினார். அவர் தங்கியிருந்த காலத்தில் ரஷ்ய தூதுவர் வாலரியன் ஸோரின் முதல் பெல்ஜிய வெளிவிவகார அமைச்சர் பால் ஹென்றி ஸ்பாக் வரை பல்வேறு ராஜ்யப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் அவருக்குச் சிறந்த வரவேற்பு ஒன்றை அளித்தார். திரு. அடெளலா புறப்பட்டதும், ஈராண்டுக் குழப்பத்திற்குப் பிறகு மாமூல் வாழ்க்கையை நோக்கி காங்கோ பயணத்தைத் துவக்கிவிட்டது என்று, அனைவரது மனதிலும் தோன்றிவிட்டது. எதிர்பார்த்ததைவிடத் துரிதமாக காங்கோவில் நிலைமை சீரடைந்து வருவதை யாரும் மறுக்கமுடியாது என்று அவர் கூறினார். அமெரிக்க அதிபர் கென்னடிக்கும் ஐ. நா. பொதுக் காரியதரிசி ஊதாண்டுக்கும் இது நல்ல செய்தியாகும். காங்கோவின் வெற்றியுடன் மிக நெருக்கமாக ஐ. நா. வின் எதிர்காலம் சம்பந்தப்பட்டுள்ளது என்பதை திரு. ஹமர்ஷீல்டைப் போலவே திரு. ஊதாண்டும் மறைக்கவில்லை.

காங்கோவிவகாரம் சம்பந்தமான ரஷியாவின் நிலைகுறித்து விவாதிப்பதற்காகக் கூடிய ஐ. நா. பாதுகாப்புச்சபைக் கூட்டம் முடிந்த சில நாட்கள் கழிந்தபிறகே பிரதமர் திரு. அடெளலா ஐ. நா. விற்கு வந்தார். நைஜீரியாவில் லாகோசில் கூடிய 20 ஆபிரிக்கநாடுகளின் ஆதரவைப் பெற்ற காங்கோ அரசாங்கம் பாதுகாப்புச்சபை கூடியதைப் பலமாக ஆட்சேபித்தது. காங்கோ வெளிப்படையாகவே ஆட்சேபித்ததைத் தொடர்ந்து அக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதால் ரஷ்ய பிரதிநிதிகள் கோபமடைந்தனர். ஐ. நா. விற்கு வந்ததும் திரு. அடெளலா தூதுவர் திரு. ஸோரினைச் சந்தித்து கெடுபிடி வல்லரசுகளால் காங்கோ அரசாங்கம் ஆட்டிவைக்கப்படவில்லை என்று விளக்கினார். "எல்லா மக்களுடனும் நாங்கள் சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்" என அவர் வலியுறுத்தினார். திரு. ஸோரினிடம் காங்கோ பிரதமர் சாமர்த்தியமாக நடந்துகொண்டதைப் பார்வையாளர்கள் பாராட்டினர்.

அரசியல் மற்றும் பொருளாதார ஆதரவுக்காக பிரதமர் திரு. அடெளலா வாஷிங்டனில் வெற்றிகரமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர். ஐ. நா. பொதுச்சபையில் அவர் தமது உரையை ஆரம்பித்தபோது முன்னாள் பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டைப் புகழ்ந்தார். பின்னர் முன்னாள் காங்கோப் பிரதமர் திரு. பாட்ரிக் லுமும்பாவைக் குறிப்பிட்டு "அவர் எங்கள் தேசத்தின் மாபெரும் வீரர்" என்றார். கடாங்கா மாகாண அதிபர் மாய்ஸி ஷோம்பேக்கு மத்திய அரசாங்கத்துடன் ஒத்துழைக்க மற்றொரு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினர். காங்கோவிற்கு உதவிபுரிந்த எல்லா நாடுகளுக்கும், காங்கோவின் சுதந்திரத்தையும் ஐக்கியத்தையும் காப்பாற்ற உயிர்நீத்த வீரர்கள் அனைவருக்கும் பிரதமர் திரு. அடெளலா அஞ்சலி செலுத்தினர், சுபிட்சமும் சமாதானமும் நிறைந்த உலகைச் சமைப்போம் வாரீர் என அவர் தமது இறுதி உரையில் கூறினர்.

# வடமாகாண பாடசாலைகள் உடற்பயிற்சிப்போட்டி

## வெற்றிபெற்றோர் விபரம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாணப் பாடசாலைகள் உடற்பயிற்சி இறுதிப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம்பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இரண்டாம் பிரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரம்:-

### உடற் பயிற்சி

முதலாவது பிரிவுப் போட்டியில் வெற்றியீட்டிய கல்லூரிகள் பெயர் வருமாறு:

**ஆண்கள்**

**13 வயதுக்கு உட்பட்டோர்**

1. பரி. யோவான் கல்லூரி. 2. மல்லாகம் இந்துக் கல்லூரி. 3. மானிப்பாய் மெமோறியல்.

**16 வயதுக்கு உட்பட்டோர்.**

1. பரி. யோவான் கல்லூரி. 2. மானிப்பாய் இந்துக் கல்லூரி, 3. மகாஜனக் கல்லூரி.

**19 வயதுக்கு உட்பட்டோர்**

1. உடுவில் மான் பாடசாலை. 2. மகாஜனக் கல்லூரி, 3. புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி.

**பெண்கள்**

**13 வயதுக்கு உட்பட்டோர்**

1. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 2. ராமநாதன் கல்லூரி, 3. மானிப்பாய் மெமோறியல்.

**16 வயதுக்கு உட்பட்டோர்**

1. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 2. மகாஜனக் கல்லூரி, 3. மானிப்பாய் மெமோறியல்.

**19 வயதுக்கு உட்பட்டோர்**

1. வேம்படி மகளிர் கல்லூரி, 2. உடுப்பிட்டி மகளிர் பாடசாலை, 3. ராமநாதன் கல்லூரி.

**ஆண்கள்**

**13 வயதுக்குட்பட்டோர்**

1. இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை, 2. பெரியபுலம் மெ. மி பாடசாலை, 3. சுழிபுரம் ஐக்கியசங்கப்பாடசாலை.

**16 வயதுக்குட்பட்டோர்**

1. சில்லாலை ஆர். சி. ஆண்கள் பாடசாலை, 2 திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, 3. வீமன்காமம் ஆங்கில பாடசாலை.

**19 வயதுக்குட்பட்டோர்**

1. பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, 2. மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை, 3. வண்ணை நாவலர் பாடசாலை.

**பெண்கள்**

**13 வயதுக்குட்பட்டோர்**

1. பெரியபுலம் மெ. மி. பாடசாலை, 2. இணுவில் மகாஜன வித்தியாசாலை, 3. கோப்பாய் மத்தியகலவன் பாடசாலை.

**16 வயதுக்குட்பட்டோர்**

1. திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை, 2. சண்டிலிப்பாய் இந்து, 3. அராலி இந்து.

**19 வயதுக்குட்பட்டோர்**

1. அச்சுவேலி சென். திரேசா பாடசாலை, 2. சண்டிலிப்பாய் வாணிநிகேதன்.

---

## அக்கரைப்பற்றிலும் இளம்பிள்ளை வாதம்

அக்கரைப்பற்று, ஞாயிறு

அக்கரைப்பற்று ஏழாம் வட்டாரத்தில் அநேகருக்கு இளம்பிள்ளை வாதம் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிகளில் இதற்கான மருந்து இன்னமும் அனுப்பிவைக்கப்படாதபடியால் 40 மைல்களுக்கப்பால் உள்ள மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு நோயாளர் அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

இந்நோய் கண்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் 4 குழந்தைகளும் அவரவர் இல்லங்களில் வைத்து ஆயுள்வேத வைத்தியர்களால் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிகிறது.

## இந்தியா – சீன தகராறு

### அமெரிக்க ஆசிரியை கருத்து

பம்பாய், மார்ச் 31

உலக அபிப்பிராயமும், சர்வதேச சூழ்நிலையும் மாறுதலடைந்தாலன்றி சீனவுடன் தமக்குள்ள எல்லைத்தகராறை இந்தியா தீர்த்துக்கொள்ள முடியாதென பிரபல அமெரிக்க நூல் ஆசிரியை ஸ்ரீமதி பெர்ல்பக் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர். ஏனைய நாடுகளால் நாம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறோம் என்ற உணர்ச்சி சீனவுக்கு இருக்கிறதென்றும், இது அபாயகரமான உணர்ச்சியெனவும் அவர் தெரிவித்தார். எனினும் ஆக்கிரமிப்பு அனுமதிக்கத்தக்கதல்ல என்றார்.

---

## அணுசக்தி மின்சாரம் மலிவாக இராது

பெங்களூர், மார்ச் 31

அணுசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் குறைந்த கட்டணத்தில் கிடைக்குமெனக் கருதுவோர் பெரிதும் ஏமாற்றமடைவர் என்று அணுசக்தி கமிஷன் தலைவர் டாக்டர் எச். ஜே. பாபா கூறினர்.

அணுசக்தி மூலம் மின்சார உற்பத்திக்கு ஆகும் செலவை இதரவழக்கமான வழிகளில் உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவுடன் ஒப்பிட்டுப் பேசினர். எரிபொருளை இறக்குமதி செய்வதாக இருந்தால் எண்ணெயையும் நிலக்கரியையும் விட உரேனியத்தை இறக்குமதி செய்வது மலிவாக இருக்கும் என்று டாக்டர் பாபா கூறினர்.

---

## மக்கள்வங்கி கிளை ஆரம்பிக்ககோரிக்கை

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறையில் மக்கள் வங்கிக் கிளை ஒன்றை ஆரம்பித்துவைத்தால் இப்பகுதி மக்களுக்கு பெரும் உதவியாக இருக்குமென மயிலிட்டிக்கிராம சபைத் தலைவர் வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரியைக் கேட்டுள்ளார்.

இப்பகுதியில் மக்கள் வங்கிக் கிளையொன்றை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்றை சபையில் கொண்டுவரப்போவதாகவும் கிராம சபைத் தலைவர் திரு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

---

## அணு ஆயுதத்தடை வாக்கெடுப்பு

சுவிட்சர்லாந்து, மார்ச் 1

சுவிட்சர்லாந்தில், உலகில் அணு ஆயுத உற்பத்தி தடை செய்ய வேண்டுமா என்பதற்கான வாக்கெடுப்பு இன்று நடைபெறுகிறது.

இதற் கிடையில் அணு ஆயுத தடை வேண்டாமென்றே மக்கள் வாக்களிக்க வேண்டுமென அரசாங்கம் மக்களுக்கு தெரிவித்துள்ளது அதற்கான அபிப்பிராயம் விளக்கமும் கொடுத்து வருகிறது.

---

## மரம் நாட்டு இயக்கம் நல்ல சாதனை

கொழும்பு, ஞாயிறு

சென்ற 4 மாதங்களில் தேசிய மரம் நாட்டு இயக்கம் 11, 48,062 மரங்களை நாட்டியது.

இந்த மரம் நாட்டு இயக்கத்தினர் 2,22,817 பலாக்கன்றுகளையும் 24, 064 ஈரப்பலாக் கன்றுகளையும் நாட்டியுள்ளனர்.

## தொழில் நுட்பக், கமிஷன் முன் சாட்சியமளிப்பர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத் தூது கோஷ்டியொன்று இம்மாதம் 9-ந்திகதி இலங்கைத் தொழில் நுட்பக் கல்விக்கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கும்தமிழ் எம் பி.க்கள்சிலர் இவர்களுக்குதவியாகச் செல்லுவார்களெனத் தெரிகிறது.

---

## குடியிருப்பாளருக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஞாயிறு

குடியிருப்பாளர்கள் தற்போது பெற்று வரும் பாதுகாப்பு ஜூலைமாதம் 19-ந் திகதியுடன் முடிவடைகிறது. இவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்ட விதிகளுக்கான கால எல்லை 19-ந் திகதியுடன் முடிவடைவதே இதற்குக் காரணம்.

'இவ்வித பாதுகாப்புகள் தொடர்ந்து அளிக்கப்படாவிட்டால் காணிச் சொந்தக்காரர்கள் குடியிருப்பாளர்களை தமது விருப்பப்படி வெளியேற்றும் நிலையிலிருப்பார்கள் என இலங்கை வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் திரு. டபிள்யு. ஜெயசிங்கி தெரிவித்தார்.

இதுபற்றி வீடமைப்பு மந்திரியிடம் முறையிட்டிருப்பதாகவும் இதற்கு ஆதரவாக 10 லட்சம் பேர் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்போவதாகவும் திரு. ஜெயசிங்கி மேலும் தெரிவித்தார்.

---

## பாடசாலைச் சொத்துக்களும் பொறுப்பேற்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் நாவலர் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்கும்பட்சத்தில் அப் பாடசாலைக்குரிய சொத்துக்களையும் எடுத்துக் கொள்ளுமெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் பொறுப்பேட்கப்பட்டது.

---

## பெண் வழக்கறிஞர் சங்கம் அமைத்தனர்

கொழும்பு, ஞாயிறு

பெண் வழக்கறிஞர் சங்கத்தின் ஆரம்பக்கூட்டம் சர்வதேச மகளிர் சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு 15 பெண் வழக்கறிஞர் சமுக மளித்தனர்.

# "சட்டசபையில் தி. மு. க. உறுப்பினர் பேசவே கூடாது"

## திரு. பி. டி இராசன் யோசனை

சென்னை, ஏப்ரல் 1

"இன்னும் குறைந்தது ஓராண்டு காலத்திற்குத் தமிழகச் சட்டசபையில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேசவே கூடாது: ஆனல் சட்டசபை நடவடிக்கைகள் அனைத்தையும் கவனித்துப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்; பொது மேடைகளில் நிகழ்த்தும் சொற்பொழிவுகளுக்கும் சட்டசபையில் நிகழ்த்தக் கூடிய சொற்பொழிவுகளுக்கும்நிறைய வேறுபாடு உள்ளது" என்று நீதிக்கட்சித் தலைவர் திரு. பி. டி. இராசன் இங்கு கூறினர். சென்னை இலட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் "தேர்தல் முடிவுகள்" என்பதுபற்றிப் பேசினர்.

திரு இராசன் மேலும் கூறியதாவது:

தமிழகத்தில் சுதந்திரக்கட்சியினல் ஒருசில இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது; எனினும் திரு. இராசகோபாலாச்சாரியின் பிரசாரம் காரணமாகத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 50 இடங்களைக் கைபபற்றி எதிர்க்கட்சியாக வந்துள்ளனர்.

### "திராவிட நாடு"

தனித் திராவிட நாடுகோரிக்கை உணர்ச்சி பூர்வமானதொரு சிக்கலே என்று திரு இராச கோபலாச்சாரி கூறினர். இதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். திராவிட என்ற சிக்கலைக் தி. மு. க. வினர். வலியுறுத்தவே கூடாது. இது குறித்து தி. மு. க தலைவர்களிடமும் நான் கூறியிருக்கிறேன். சட்டசபை தி. மு. க. உறுப்பினர்கள், அனைவரும் தங்கள் தலைவர்மூலமே கருத்துக்களை வெளியிட வேண்டும் தாறுமாருக கருத்துக்களை முன்பட்டமுறையில் வெளியிடக்கூடாது. அவர்கள் மாதிரி அமைச்சரவை அமைத்துக் கொள்ளவேண்டும். காஞ்சிபுரத்தில் திரு அண்ணுத்துரை தோல்வி அடைந்ததுபற்றிக் குறிப்பிட்டு திரு திரு. இராசன் சொன்னதாவது:- காஞ்சிபுரம் தொகுதியில் திரு. அண்ணத்துரை தோற்கடிக்கப்பட்ட செய்தி வருந்துதற்குரியது. வலுவான் எதிர்க்கட்சி வேண்டும் என்று கூறும் காங்கிரசார் அண்ணுத்துரையைத் தோற்கடிக்க தங்கள் முழுபலத்தையும், ஏன், அரசு அலுவல்களையும் கூட பயன்பத்தினர்கள். தேர்தல் ஒழுங்கு என்று கூறி அமைச்சர்களே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டு பின்னர் அவர்களே அதைமீறி விட்டார்கள். காஞ்சிபுரத்தில் மற்றொரு "பாரதப் போர்" நிகழ்ந்ததென்றே கூறலாம்.

அறிவு இருந்தாலும் ஒழுக்கமில்லாமல் பொதுமெடையில் பேசுவதையும் கட்டுப்பாடின்றி எது எதையோ எடுத்துரைப்பதையும் மக்கள் விரும்பவில்லை என்பதைத் தேர்தல் முடிவுகள் நன்கு காட்டியுள்ளன. வாக்காளர்கள் அபேட்சகர்களைக் கவனித்து வாக்களிக்கவில்லை என்பதையும் தேர்தல் முடியுகள் காட்டியுள்ளன.

### சுதந்திரக்கட்சி

சுதந்திரக்கற்சி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது. என்ருலும் கூட அதற்கு நல்ல தலைமை கிடைத்திருக்கிறது. ஆனல் அக்கட்சிக்குப் போதிய அமைப்பு வலிமை கிடையாது. அதே நேரத்தில் தி. மு. க. விடமே நல்ல அமைப்பு இருக்கிறது. ஆனல் அங்கு தலைமை திறமையாக இல்லை. ஆகவே தான் தேர்தலில் இந்த இரு கட்சிகளும் இடையில் ஓர் உடன்பாடு ஏற்படவேண்டும் என்று நான் முயற்சிகள்மேற்கொண்டேன்.

பிராமணர்கள் பிராமணர் அல்லாதவரின் உறவில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைத் திரு. இராசகோபாலாச்சாரி ஏற்படுத்தியிருக்கிறார்:

சட்டசபைத் தொகுதிகள் பெரிதாக இருந்தால் தேர்தலின் சாதிவெறி அதிகமாகத் தலைகாட்டாது தொகுதிகள் மாவட்ட அளவில் அமைய வேண்டும்.

### புதிய அமைச்சரவை

ஒன்பது அமைச்சர்களைக் கொண்ட புதிய அமைச்சரவை தமிழகத்தின் நல்ல முறையில் நிர்வாகத்தை நடத்தும். இன்னும் சில துணை அமைச்சர்களையும் நியமிக்கலாம் என்று நான் கருதுகிறேன். புதிய அமைச்சரவையில் அனுபவம் இல்லாதவர்களும் உள்ளனர். தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகளை நல்ல முறையில் செய்திருந்த காவல்துறையினரையும் திரு. இராசன் பாராட்டினர். இக் கூட்டத்திற்குத் தமிழக உயர் நீதிமன்ற முன்னள் நீதிபதி திரு. பி இராசகோபாலன் தலைமை தாங்கினர். படிக்காதவர்களும் அரசியல் உணர்ச்சி பெற்றிருக்கலாம் என்ருர் அவர் தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்த காவல் துறையினரை திரு. இராசகோபாலனும் பாராட்டினர்.

---

## காரில்வந்த முகமூடித் திருடர்கள்

### பெண்ணிடம் சங்கிலி கொள்ளை

அறந்தாங்கி, ஏப். 1

குளவாய்ப்பட்டியை அடுத்த அரிமழம் மீனட்சிபுரத்தில் பழனிவேல் சேர்வை வீட்டில், அவருடைய தாயார் சின்னுத்தாள் தனியாக இருந்ததாகவும் அப்பொழுது கறுப்பு முகமூடி அணிந்த 5 நபர்கள் வாடகைக் காரில் வந்திறங்கி வீட்டில் புகுந்து பெண்ணிடம் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

முகமூடித்திருடர்களைக்கண்டு சின்னுத்தாள் கூச்சல்போட வாயைத் திறந்தாராம். அப்பொழுதுபிச்சுக் வாகத்தியைக் காட்டி சப்தம் போட்டால் கொன்று விடுவதாகப்பயமுறுத்தி, அவர் கழுத்திலிருந்து 10 பவுன் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடியதாகவும் கூறப்படுகிறது.

திருடர்கள் வீட்டை விட்டு வெளியேறியதும் சின்னுத்தாள் "திருடன் திருடன்" என்று சத்தமிட்டதாகவும், அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் திரண்டு வந்து ஓடிய திருட்டுக் கூட்டக்காரரை விரட்டியதாகவும் ஆட்கள் தொடர்ந்து வருவதைக் கண்ட திருடர்கள் கைத் துப்பாக்கியால் அவர்களை நோக்கி சுட்டதாகவும், திருடர்கள் வாடகைக் காரில் ஏறி ஓடிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றி அரிமழம் பொலிஸில் புகார் செய்யப்பட்டது. வழக்குப் பதிவு செய்து கொண்ட பொலிஸார் இது குறித்து தீவிர புலன் விசாரணை செய்து சௌந்தரராஜன் செட்டியார், மாணிக்கம்பிள்ளை முதலியவர்களைக் கைது செய்தனர். இந்த வழக்கின் மற்றொரு எதிரிபான மீனட்சிபுரம் முத்துவேல் என்பவர் தலைமறைவாகஇருக்கிருராம். புதுக்கோட்டை வீதியில் நின்று கொண்டிருந்த ஒரு காரை இவர்கள் ஓட்டி வந்து இந்தக் கொள்ளையை நடத்தியதாகப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

## பட்டின சபை கூட்டம்

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் திரு. பி இம்மனுவல் தலைமையில் நடைபெற்றது.

ஆஸ்பத்திரி சேவையிலுள்ள வெளிநாட்டுக் கன்னியாஸ்திரிகளின் விசாவைப் புதுப்பித்து இன்னும் சில வருடங்களுக்கு அவர்களின் பணிகளுக்கு இடம் கொடுக்கவேண்டுமென பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

வரட்சியான காலத்தில் நாரந்தனையில் இருந்து குழாய் மூலம் கொடுக்கப்படும் தண்ணீர் அடுத்த மாதங்களில் சொற்பமாகவே கிடைக்கும் என்ற காரணத்திஞல், ஊர்காவற்றுறை பட்டின மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்குப் பத்தாயிரம் ரூபா நன்கொடை அளிக்கவேண்டுமென அரசினரைக் கேட்டுக்கொள்ளும் மற்றோர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# வெலிசறை கடற்படைத்தளம் ஒப்படைக்கப்பட்டது

## பிரிட்டிஷார் ஒப்படைக்கும் கடைசி தளம் இது

கொழும்பு, ஞாயிறு

வெலிசறையில் பிரிட்டிஷ் கடற்படையினரால் உபயோகிக்கப்பட்டு வந்த வானொலி நிலையம் நேற்று இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

பிரிட்டிஷாரால் ஒப்படைக்கப்பட்ட இறுதி கடற்படைத் தளம் இது.

காலஞ் சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்காவுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இடையில் 1957-ம் வருடம் ஜூன் மாதம் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி பிரிட்டிஷ் அரசாங்கம் 2-வது உலக மகாயுத்தத்தின்போது கட்டப்பட்ட தளங்களையெல்லாம் ஒரு குறிப்பிட்டகால எல்லையுள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்துகொண்டு தனது வாக்குறுதியைக் காப்பாற்றியுள்ளது. பிரிட்டிஷ் கடற்படையைச் சேர்ந்த ஐந்து கடற்படை வீரர்கள் மட்டும் தான் இன்னும் இந்த கடற்படைத் தளத்தில் இருக்கிறார்கள். இலங்கை அரசாங்கத்துக்கு ஒப்படைக்கப்படும் தளம் பற்றிய அலுவல்களைக் கவனிக்கவே இவர்கள் இங்கு தங்கியிருக்கிறார்கள்.

தற்பொழுது கடற்படைத் தலைமைக் காரியாலயத்திலுள்ள விடுதிகளில் தங்கியுள்ள (இலங்கை) கடற்படை வீரர்கள் வெலிசறையிலுள்ள கடற்படைத் தளத்துக்கு மாற்றம் செய்யப்படுவார்கள் என கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பொலிசார் தாக்கப்பட்டனர்

### காஞ்சிபுரத்தில் சம்பவம்

காஞ்சிபுரம், மார்ச் 31

சட்டவிரோதமாகச் சாராயம் விற்பதாகக் கிடைத்த தகவலின்மீது கூரம் கிராமத்துக்குச் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் அங்கு இருவரைக் கைது செய்தபோது கிராமவாசிகளைக் கொண்ட கூட்டமொன்று பொலிஸ் கோஷ்டியைக் கற்களால் தாக்கிவிட்டு கைது செய்யப்பட்ட இருவரையும் விடுவித்தது.

உதவி இன்ஸ்பெக்டர், தலைமைக் கான்ஸ்டபிள், கான்ஸ்டபிள் ஆகிய மூவரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் பின் உயர்தர பொலிஸ் அதிகாரிகளுடன் அக்கிராமத்துக்குச் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் அங்கு எவரையும் காணாது திரும்பினர். இது சம்பந்தமாக இதுவரை மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கூ. மொ. வி. ஸ்தாபனம் புனரமைப்பு வேலை

கொழும்பு, சனி

கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனத்தின் நிர்வாகத்தில் திருத்தங்களை ஏற்படுத்து முகமாக தாபனத்தின் புனரமைப்பு வேலைகளை வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன பொது உதவி நிருவாகர்களை நியமிக்க விருக்கிறார். இவர்களே இறக்குமதி, உள்ளூர் விநியோகம, நிருவாகம், விற்பனவு, ஆராய்ச்சி வேலைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாவார்கள் எனத் தெரிகிறது. பொருள்கள் வாங்குவதற்கான கமிஷனர் தனது கடமைகளுடன் ஒரு உதவி நிருவாகராகவும் கடமையாற்றுவார் எனத் தெரிகிறது.

இந்த மாற்றங்கள் செய்யப்பட்டதும், கூ.மொ.வி. தாபனம் சிறப்பாகத் தொழிற்படுவதற்கான ஏனைய மாற்றங்களும் படிப்படியே கொண்டுவரப்படும் என வர்த்தக அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்னும் சில தினங்களில் ஆரம்ப மாற்றங்கள் செய்யப்படும் எனத் தெரிகிறது.

கிளித்தட்டு

## முத்துக்குமாரு இல்லப் சாம்பியனாகியது

தெல்லிப்பழை, சனி.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை இல்லங்களுக்கிடையேயான கிளித்தட்டுப் போட்டிகள் முடிவடைந்து விட்டன. முத்துக்குமாரு இல்லம் கிளித்தட்டுப் போட்டிகளில் மிகத் திறமையாக விளையாடி சாம்பியனாகியது.

## இந்திய செய்திப்படம்

### யாழ்ப்பாணத்தில் காட்டப்படும்

தெல்லிப்பழை, ஞாயிறு

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இலங்கையிலுள்ள இந்திய ஹைக்கமிஷன் கலா சாரம், தொழில் நுட்பம் சம்பந்தமான படக்காட்சி விழாவை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது. இம்மாதம் 10-ம் திகதி காங்கேசன்துறை வெளிச்ச வீட்டு மைதானத்தில் படக் காட்சி விழா நடைபெறவிருக்கிறது.

சிவ நடனம், பரத நாட்டியம் போன்ற தமிழ்க் கலாசாரச் செய்திப் படங்களும், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் சம்பந்தப்பட்ட படங்களும் முக்கிமாகக் காண்பிக்கப்படும். இந்தியஹைக்கமிஷன் படக்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளவர்களுக்கு அனுப்பியுள்ள சுற்று நிருபத்தில் சுமார் முன்னூறு படக்காட்சிகளின் பெயர்களைத் தெரிவித்து அவற்றுள் ஏழு காட்சிகளைத் தெரிவு செய்யுமாறு கோரியிருந்தது. பௌத்த மதத் தொடர்புடைய காட்சிகளும் இவற்றுள் அடங்கியுள்ளன.

## பாத யாத்திரை

தெல்லிப்பழை, ஞாயிறு

யாழப்பாணம் சமயா சாரியார் பாதயாத்திரைச் சபையினர் வழமை போல இவ்வருடமும் தென்னிந்தியாவில் பாத யாத்திரை மேற்கொள்ளவிருக்கின்றனர். இவர்கள் இந்தியாவிலுள்ள புனித ஸ்தலங்கள் அனைத்தையும் தரிசிப்பதனையே தமது இலட்சியமாகக் கொண்டு வருடந்தோறும் பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.

## பிரிவுபசாரத்தில் தங்க மோதிரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

நல்லூர் கிராம சபையின் காரியதரிசியாகக்கடமையாற்றி மன்னார் மேற்கு கிராம சபைக்குப்பதவி உயர்வுபெற்றுச் செல்லும் திரு. கே. சிவபாதத்திற்கு நல்லூர் கிராம சபை உறுப்பினர்களும் ஊழியர்களும் சனிக்கிழமை ஓர் பிரிவுபசார மளித்தனர். இப் பிரிவுபசாரக் கூட்டத்திற்கு தலைவர் திரு. சபாபதி தலைமை வகித்தார்.

நல்லூர் கிராம சபை முத்திரை பொறித்த தங்கப் பதக்கமொன்று அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது

## மருத்துவ கவுன்சில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, சனி

தம்முடன் வேலைபார்க்கும் அறுவை மருத்துவருக்கு எதிராக வைத்திய நிபுணர் ஒருவரால் செய்யப்பட்ட முறைப்பாடு சம்பந்தமான விசாரணையைநேற்று வைத்திய கவுன்சில் ஆரம்பித்துள்ளது. குறிப்பிட்டகண் வைத்தியர் வைத்திய ஒழுங்கு முறையை மீறி நோயாளர்களுக்குக்கடித மூலமாகவும், விளம்பரம் மூலமாகவும் தன்னை அறிமுகப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அந்த வைத்திய அதிகாரியின் பெயரை வைத்திய பதிவு இடாப்பிலிருந்து நீக்குவதற்கான ஒழுங்கு நடவடிக்கையை இக் கவுன்சில் எடுக்கும்

# இளம்பிள்ளைவாத நோய்

## பரவாதிருக்கவழி

கொழும்பு, ஞாயிறு

இளம்பிள்ளை வாதநோய் பற்றி பலர் விபரம் அறியாதிருப்பதால் தான் இந்நோய் மேலும் பரவி வருவதாகத் தெரிகிறது. வாதநோய் பரவும் ஆரம்பகாலத்தில் இதற்கு தகுந்த சிகிச்சையளிக்காதிருப்பதும்இந்நோய் பரவுவதற்குவழி செய்வதாகவிருக்கும்.

இந்நோய் பரவாது தடை செய்ய சில சாதாரண விஷயங்களை நாம் அறிந்து கொள்வது மிக அவசியம். குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்தவுடன் குழந்தையை புறம்பான படுக்கையில் விட்டுவிட வேண்டும். அதற்கு போதுமான ஓய்வு தேவை. சுகவீனமாக இருக்கும் குழந்தை நிசப்தமான சூழ்நிலையில் ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வாதநோய் பரவுவதற்கான அறிகுறி காணப்பட்டவுடன் தகுந்த சிகிச்சை அளிக்கவேண்டும். முதலிலேயே தடுப்பு நடவடிக்கை எடுத்தால் விரைவில் இந்நோய் பரவாது தடுத்துவிடலாம்.

மலேரியா காய்ச்சல், இலேசான காய்ச்சல், தலையிடி, தசைநார்களில்ஏற்படும்நோவு, வாந்தியெடுத்தல், வயிற்றுச் சுகவீனம், தேக அலுப்பு, தேகச் சோர்வு, தொண்டை நோவு இவை போன்ற நோய்கள் கண்டவுடன் தாமதியாது சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.

இளம்பிள்ளை வாதநோய் கண்டுள்ள ஒரு குழந்தையை மிகவும் அவதானமாகவும் பதுமையாகவும் கவனிக்கவேண்டும்.

## காவற்காரர் தற்காலிக வேலைநீக்கம்

பாணந்துறை, ஞாயிறு

பாணந்துறை நகரசபையில் காவற்காரராகக் கடமையாற்றிய நான்கு பேர்களை நகர சபைத் தலைவர் திரு. டைட்டஸ் குணத்திலகா தற்காலிகமாக வேலைநீக்கம் செய்துள்ளார்.

புதன்கிழமை இரவு திடீர் பரிசோதனை செய்தபோது இக்காவற்காரர்கள் நித்திரை செய்துகொண்டிருக்கக் காணப்பட்டதாக உபதலைவர் திரு. டி. டபிள்யு. விஜயசூரியா புகார் செய்ததைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## கார் 'லைசன்ஸ்'

கொழும்பு, ஞாயிறு

இந்த வருடத்துக்கான கார் லைசன்ஸ் பெறாதவர்கள் மீது வழக்குத் தொடரப்படுமென மோட்டார் போக்குவரத்து கமிஷனர் தெரிவித்துள்ளார். ஏப்ரல் 16-ந் திகதியிலிருந்து இதுபற்றி பொலிசார் கண்காணிக்கத் தொடங்குவார்கள்.

# தேசிய ஒருமைப்பாட்டுக்கு எழுத்தாளர்கள் உழைக்கவேண்டும்

### — டாக்டர் ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, மார்ச் 31

"தேசிய ஒருமைப்பாட்டுக்கு எழுத்தாளர்கள் உழைக்கவேண்டும். பூசல்களையும் பிணக்குகளையும் குறைத்து சமூகத்தில் நல்ல சூழ்நிலை ஏற்படுவதற்கான வழிசெய்வதில் எழுத்தாளர்கள் தமது திறமையைப் பயன்படுத்தவேண்டும்."

இவ்வாறு இந்திய உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் புதுடில்லியில் நடைபெறும் எழுத்தாளர் மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார். டாக்டர் ராதாகிருஷ்ணன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"மக்களை நல்வழிப்படுத்துவதில் எழுத்தாளர்களுக்குப் பெரும் பொறுப்பு உண்டு. நல்ல அறிவை மக்களிடையே வளர்த்து சமூகத்துக்கு உதவும்வகையில் அவர்களை வாழச்செய்வதற்கு, எழுத்தாளர்கள் உதவவேண்டும்."

திரு. பி. எம். பணிக்கர் பேசுகையில்தெரிவித்ததாவது:

தேசிய ஒற்றுமை வேண்டும். ஆனல் பலாத்காரப்படுத்தி எல்லோரையும் ஒன்ருக்கிவிட முடியாது. உள்ளத்துக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதால் ஒற்றுமை வளரலாம். ஒருவரோடு ஒருவர் நேச மனப்பான்மையோடு பழகுவதாலேயே தேசிய ஒருமைப்பாடு உருவாகும். எழுத்தாளர்கள் நாட்டு முன்னேற்றம் கருதி தமது ஆற்றலை உபயோகப்படுத்தவேண்டும்.

இம் மகாநாட்டில் 1961-ம் வருடத்துக்கான அகாடமி பரிசு பெற்ற எழுத்தாளர்களும் கலந்துக்கொண்டனர்.

## அல்ஜீரியாவில் துக்க தினம்

அல்ஜியர்ஸ், ஏப்ரல் 1

அல்ஜீரியாவில் பிரஞ்சு பாதுகாப்புப்படைகள் இரகசிய ராணுவத்தினருக்கு எதிராக எடுத்தநடவடிக்கைகளின் விளைவாகக்கொல்லப்பட்ட 50 பேர்களுக்கு அனுதாபந் தெரிவிக்குமுகமாக துக்கம் அனுஷ்டிக்குமாறு அல்ஜீரியர்களுக்கு இரகசிய ஸ்தாபனத்தினர் துண்டுப்பிரசுரம் மூலம்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துக்க தினம் காரணமாக பலாத்கார சம்பவங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காக பிரஞ்சுப்படைகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

## கணக்குப் போடும் 'மூளை'

கேம்பிரிட்ஜ், மார்ச் 31

மனிதனுடைய தலையைக் காட்டிலும் சிறிய அளவுள்ள புதுரக மின்னலை மூளையை உருவாக்கிக் கொண்டிருக்கும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் இம் மூளைகள் எதிர்காலத்தில் கணக்கு யந்திரங்களின் ஸ்தானத்தைப் பெறும், என்று கூறினர்.

இம் மூளை ஒரு விநாடிக்குள் 10 கோடி கணக்குகளைப்போடுமென்று கணிதசோதனைச்சாலை பிரதம என்ஜினியர் நீல்வைஸ்மன் கூறினர். இந்த யந்திரத்தை நல்ல முறையில் அமைக்க இன்னும் ஈராண்டுகள் ஆகுமெனக் கூறப்பட்டது.

## பொதுசன நூல்நிலையம்

### விடுமுறை நாட்களிலும் திறக்கவேண்டும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொதுமக்களுடைய நலனை முன்னிட்டு பகிரங்க விடுமுறை நாட்களிலும் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்தைத் திறந்திருக்கச் செய்யுமாறு கோரி கொழும்புத்துறை கிழக்கு சனசமூகநிலையச் செயலாளர் மேயருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளார்.

இவ்விஷயத்தை நூல்நிலையக் கமிட்டியின் ஆலோசனைக்கு விட்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

## சுக்கிரன் ஆராய்ச்சி

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

முதல் தடவையாக, சந்திரனின் மேற்பரப்பில் கருவிகளை இறக்குவதற்கும் சந்திரனை மிக அருகிலிருந்து படம் பிடிப்பதன் பொருட்டும், இந்த ஆண்டு இரு ரேஞ்சர் கோள்கள் அனுப்பப்படும். சந்திரனில் ஏற்படும் அதிர்வுகள் அங்குள்ள கதிரியக்கம், அதன் சீதோஷ்ணம் முதலியவற்றை கோள்களிலுள்ள கருவிகள் பதிவு செய்யும்.

மிகத் திறமையான
பவர்ஸ்
உரங்கள்
கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்
லாபகரமாய் பயிரிட
புகையிலை
வெண்காயம்
மிளகாய்
மரக்கறி
நெல்
வாழை
மற்றும் பழவகைகளும்
கிடைக்குமிடம்
ஏ. பவர்
அன் கொம்பனி லிமிட்டெட்,
த. பெ. 11, கொழும்பு

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

திங்கள் 2-4-62

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 கிளாரினெட், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 கமலா கிருஷ்ணமூர்த்தி—வீணை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 குரல் வகை, 9-45 கே. மகாலிங்கம்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 காமகோடிபாய் ஜலதரங்கம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 டி. பி. ரத்னகுமாரி—பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க—மாணவர் நிகழ்ச்சி, 2-30 பழமாநேரி எஸ். நடராஜன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல். 7-35 நல்லுரை, 7-40 திரைப்பட இசை, 8-00 காமகோடிபாய் ஜலதரங்கம், 8-30 பழமாநேரி எஸ். நடராஜன்—பாட்டு, 9-30 டி. பி. ரத்னகுமாரி—பாட்டு.

## சமாதான நீதிபதி நியமிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சலவைத் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்த இருவரை சமாதானநீதவனாக நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று இலங்கை சலவைத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்கூட்டம் திரு. எம். கே. நடேசன் தலைமையில் நடைபெற்றது.

# சென். பெனடிக்ஸ் சாம்பியனாக தெரிவு

## யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பாஸ்கட் பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கைக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற பாஸ்கட் பந்தாட்ட இறுதிப் போட்டியில் கொழும்பு சென். பெனடிக் கோஷ்டி சாம்பியனாக வெற்றியீட்டியுள்ளது. கொழும்பு ரோயல் கல்லூரியும். கொழும்பு சென். பெனடிக் கல்லூரியும் இந்த இறுதிச் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்டன.

நேற்று இரவு 8 மணிக்கு ஒளி வெள்ளத்தில் ஆரம்பமான இப் போட்டியைக் கண்டுகளிப்பதற்காகப் பெருந்தொகையான ரசிகர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் திரண்டிருந்தனர். விளையாட்டு வீரர்கள் மைதானத்தை வந்தடைந்தபோது கரகோஷம் செய்து வரவேற்றனர். நேற்றைய போட்டியின் பிரதம விருந்தினராக வந்திருந்த யாழ்ப்பாணம் மேயர் திரு. எம். யேக்கடபுர்கு முதலில் விளையாட்டு வீரர்கள் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர்.

கொழும்பு சென். பெனடிக் கோஷ்டி 48 புள்ளிகளும், கொழும்பு ரோயல் கோஷ்டி 32 புள்ளிகளும் பெற்றன.

### மன ஆறுதல் போட்டி

மேற்படி சுற்றுப்போட்டியில் ஏற்கனவே தோற்றுப்போன கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற மன ஆறுதல் போட்டியில் கடைசியாகவெற்றியீட்டியகொழும்பு சென்ஜோசப்கல்லூரியும் கொழும்பு சென். பீட்டர்ஸ் கல்லூரியும்கலந்துகொண்டன. சென். பீட்டர்ஸ் கல்லூரி 46-34 புள்ளிகளால் தனது எதிர்க்கோஷ்டியைத் தோற்கடித்து மன ஆறுதல் போட்டிக்கான பரிசைப் பெற்றுக்கொண்டது.

### காட்சி ஆட்டம்

இதற்குமுன் நடைபெற்ற காட்சி ஆட்டமொன்றில் இலங்கை பல்கலைக்கழகக் கோஷ்டியும், யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டியும் கலந்துகொண்டன. இந்த ஆட்டத்தில் 40-23 புள்ளிகளால் பல்கலைக்கழகக் கோஷ்டி வெற்றியீட்டியது.

(இச் செய்தி நேற்று யாழ்ப்பாணப் பதிப்பில் வெளியாகியிருந்தது.)


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு
எவ்வளவோ
நன்மையளிக்கின்றது..






நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 37 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ்
(சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்ருல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது


## சிரேஷ்டபாடசாலைகளாகவே இருக்கட்டும்

### கி. ச. தலைவர் மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கோப்பாயிலுள்ள சிரேஷ்ட பாடசாலைகள் தொடர்ந்தும் சிரேஷ்ட பாடசாலைகளாக இயங்க வேண்டுமென்று கோப்பாய் கிராமசபைத் தலைவர் திரு கே. இராசரத்தினம் வித்தியாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில் கோரியுள்ளார்.

சிறு பிள்ளைவாதம் பரவாமல் தடுப்பதற்கு பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு நோய் தடுப்பு மருந்து கொடுப்பதற்கு வேண்டிய மருந்துகளை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அரசாங்கத்துக்கெழுதியுள்ளஒருகடிதத்தில்அவர்கேட்டுள்ளார். இதுசம்பந்தமாக கோப்பாய் வைத்திய அதிகாரி டாக்டர் மகதேவா எடுத்திருக்கும் முன்னேற்பாடுகளுக்கு அவர் பாராட்டும் தெரிவித்திருக்கிருர்.

## இந்துக்கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் குருநாகல்சென். அன்ரனிஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் பந்தாட்டப் போட்டியில் இந்துக் கலூரி இன்னிங்ஸாலும் 38 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

## ஸ்தாபகர்தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலை ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இம்மாதம் 4-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

# 3 லட்சம் காசோலைகள் மாற்றப்பட்டன

## வங்கிவேலைநிறுத்தத்தின் எதிரொலி

கொழும்பு, ஞாயிறு

வேலைநிறுத்தம் காரணமாகத் தாமதிக்கப்பட்ட, வர்த்தக வங்கிகளின் சுமார் 300,000 காசோலைகள், நேற்று இலங்கை வங்கியின் வெளிநாட்டு இலாகாவின் மாற்றிக்கொடுக்கப்பட்டன. இதுபற்றி வர்த்தக வங்கிகளின் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், வழக்கமாக 25,000 காசோலைகள் மட்டுமே ஒரே தடவையில் மாற்றிக்கொடுக்கப்பட்டன என்று கூறினர்.

வர்த்தகவங்கிகள் எல்லாவற்றிலும் வேலை கள் இன்று தொடர்ந்தும் நடைபெற்றன. ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில், பாவனையாளர்களுக்குரிய அறிக்கைகளை வங்கிகள் அனுப்பிவைக்கும் எனத் தெரிகிறது.

இது சம்பந்தமாக வர்த்தக வங்கிகள் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், ஏப்ரல் மாதம் 20-ம் திகதி தொடக்கம் வங்கிகள் முன்போல தனது வழமையான நிலைக்கு வந்துவிடும் என்று கூறினர்.

அண்மையில் நடைபெற்ற வேலைநிறுத்தத்தினல் பாதிக்கப்பட்ட எல்லா வங்கிகள் ஊழியர்களுக்கும் இரண்டு மாத அட்வான்ஸ் வழங்கப்பட்டுள்ளது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கும்பனித்தெரு)

வெலிங்டன் விஜயா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த
சிறந்த கலர் படம்!
பார்த்து பயன் அடையுங்கள்!



சித்ரா • அசாத்
கிருஷ்ணகுமாரி
நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
2-4-62 திங்கள் முதல்
மாலை 6-30 இரவு 9-30 க்கு
ரீட்டா ரத்னுயக்கா, புளோரிடா ஜெயலத்,
ஹேர்பி செனிவரத்ன
மற்றும் பலர் திறம்பட நடித்த
தருவ கலகெத
(சிறந்த சிங்களம் பேசும் படம்)

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில்
மாலை 4-15 க்கும்
காரோல் லின்லே நடித்த
ரிடேர்ன்டு பேடோன் பிளேஸ்
(ஆங்கிலம்)
RETURN TO PEYTON PLACE
(Cinemascope - Color by De Luxe)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது (ЕВУС 10)

# "தொழிற்சங்கத்தில் வகுப்புத்துவேஷத்திற்கு இடமில்லை"

### தமிழ் நாட்டில் தமிழே போதனமொழி

சென்னை, ஏப்ரல் 1

தமிழ் நாட்டில் ஆங்கிலத்துக்குப் பதில் தமிழே போதனமொழியாய் இருக்குமென கல்வி மந்திரி பக்தவத்சலம் கூறினர். இது விஷயத்தில் அரசாங்கத்தின் கொள்கையில் மாறுதலே இருக்கக்கூடாது என்பது தமது கருத்து என்றும் மந்திரி கூறினர். சில பள்ளிக்கூடங்களில் தமிழ், போதனமொழியாய் ஏற்கனவே இருப்பதாயும், மற்றக்கல்லூரிகளுக்கும் இது விஸ்தரிக்கப்படும் என்றும் திரு. பக்தவத்சலம் கூறினர்.

### இந்தியாவில் மெட்ரிக் எடை

புதுடில்லி, ஏப்ரல் 1

இன்று முதல் இந்தியா முழுதும் மெட்ரிக் எடை அமுலுக்கு வந்தது. உலகில் 85 சத விகித மக்கள் மெட்ரிக் எடையையே உபயோகிக்கிறார்கள்.

### வீரப் பதக்கம்

புதுடில்லி, ஏப்ரல் 1

திருநெல்வேலியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் செல்லையன் என்பவருக்கு துணிகரச் செயலுக்காக பொலிஸ் வீரப் பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

### வாதநோய் மருந்துகள் பிரிட்டன் உதவி

கொழும்பு ஞாயிறு

இலங்கை அரசாங்கம் விண்ணப்பித்தற்கிணங்க ஒரு பிரிட்டிஷ் வர்த்தக நிலையத்திலிருந்து 100,000 இளம் பிள்ளைவாத நோய் தடுப்பு மருந்துகளை இரண்டு இலங்கை கடற்படை விமானங்கள் கொண்டுவந்தனர்.

### டாக்டர் மு. வ. வுக்கு இலக்கிய பரிசு

புதுடில்லி, ஏப்ரல் 1

பாரத சாகித்திய அக்காடமியின் 1961-ம் ஆண்டுக்கான இலக்கிய பரிசு நேற்று புதுடில்லி வைபவம் ஒன்றில் உப ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணனல் வழங்கப்பட்டது. தமிழ் இலக்கியத்துக்கான பரிசு டாக்டர் மு. வரதராஜனுக்குக் கிடைத்துள்ளது.

## அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் ஆண்டுவிழாவில் திரு. பியதாசா உரை

யாழ்ப்பாணம், திங்கள்

"யாவரும் தொழிற்சங்கவாதிகளே என்பதை ஒப்புக்கொள்ளும்போது அதில் வகுப்புத் துவேஷம் இருப்பதற்கு இடமில்லை. ஒன்றுபட்ட தொழிலாளிகளின் இயக்கத்தினல் தான் இந்த நாட்டின் சுபீட்ச வாழ்வுக்கு வழிகோல முடியும். அப்படி இல்லாத சுயநலவாதிகளால் தொழிலாளி இயக்கங்கள் முறியடிக்கப்படுகின்றன"

அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் தலைவரான ஆரிப்பொல பியதாசா நேற்று நடைபெற்ற மேற்படி சங்க யாழ்ப்பாணக்கிளையின் 14-வது ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரசினர் சிங்கள மகாவித்தியாலயத்தில் திரு. சி. இளையதம்பி தலைமையில் நடந்த விழாவில் அவர்மேலும் பேசும்போது கூறியதாவது.

"தமிழ் சிங்கள முஸ்லிம் மக்களை அங்கத்தவர்களாகக் கொண்ட இந்த சம்மேளனம், இந்த 3 பிரிவினரிடையேயும் எந்த விதமான குரோதமும் ஏற்படாமல் சகோதர பாசத்துடன் நடந்து வருகிறது. குறுகிய மனப்பான்மைகளுக்கு இடமளியாது எமது ஸ்தாபனம் நல்வழி காட்டும் நிலையில் இருக்கிறது.

தாய்ச்சங்கத்தின் உபதலைவர் திரு. பீட்டர் முத்தையா பேசுகையில், இந்த ஸ்தாபனம் தொழிலாளருக்கு ஈட்டிக்கொடுக்கும் வெற்றியை எடுத்துரைத்ததுடன் கிளைச்சங்கத்தின் முன்னேற்றத்தையும் பாராட்டினர்.

யாழ்ப்பாணக்கிளையின் புதிய தலைவர் திரு. கே. செல்லத்துரை உட்பட மற்றும் பலரும் பேசினர்.

**தீர்மானங்கள்**

பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

அரசாங்க பொதுச்சேவையாளர் மாத்திரம் அன்றி அரசாங்கத்தின் கீழ் வேலைசெய்யும் எல்லாப் பிரிவிலும் உள்ள ஊழியர்களிடமும் 8 மணி வேலைக்குமேல் வேலைவாங்காதிருக்க வேண்டும். அப்படி கூடுதலாக வேலைவாங்குதாக இருந்தால், கூடுதலாக வேலை செய்யும் எல்லா அரை மணி நேரத்தையும் ஒரு மணி நேரமாகக் கணக்கிட்டு மேலதிக நேரச்சம்பளம் வளங்கவேண்டும்.

இலங்கையிலுள்ள பெரிய கச்சேரிகளில் ஒன்றாகிய யாழ்ப்பாணக் கச்சேரியில் தற்பொழுது ஒரு பிரதிபெருக்கும் மின்சார இயந்திரம் இருக்கின்றது. இவ்வியந்திரத்தை கச்சேரியில் கடமையாற்றும் அ. பொ. சேவையாளரே இயக்கி வருகின்றார்கள். இந்த இயந்திரத்தில் வேலை பார்க்கும் பொழுது சிலசமயங்களில் இயந்திரக்கோளாறினல் இயக்குகின்றவர்களுக்கே ஆபத்து ஏற்படக்கூடும். சில காலத்தில் மின்சாரக் கோளாறினல் மின்சார அதிர்ச்சிக்கு உள்ளாகி அவர்களின் உயிருக்கே ஆபத்து வரக்கூடிய முறையில் அவஸ்தைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

ஆகவே ஏனைய அரசாங்க இலாகாக்களில் இருப்பது போல் ஒரு பிரதியெடுக்கும் இயக்குனரை யாழ்ப்பாணம் கச்சேரிக்கு உடனடியாக நியமிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் எமது சங்கம் கேட்டுக்கொள்ளுதல்.

இலங்கையெங்கிலும் உள்ள கச்சேரிகளில் திறப்பு எடுத்தலும் வெவ்வேறு வித்தியாசமான முறைகளில் நடைபெற்று வருகிறது. இதனல் எமது தொழிலாளிகள் பலர் கஷ்டத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. இலங்கையிலுள்ள எல்லாக் காரியாலயங்களிலும் திறப்பு எடுக்கவும் வைக்கவும் சரியான முறையைக் கையாளக்கூடிய ஒரு திட்டத்தை ஏற்படுத்தித் தரும்படி மிகவும் தாழ்மையாக எமது தாய்ச் சங்கத்தை வேண்டிக்கொள்ளுதல்.

வட இலங்கையிலுள்ள அ. பொ. சேவையாளர் ஒவ்வொருவருக்கும் ஐந்து ஏக்கர் நெல் காணி தந்து உதவும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளல்.

எமது சங்க ஊழியர்கள் இளைப்பாறியதும் அவர்களின் இளைப்பாற்றுச் சம்பளம் காலதாமதம் இன்றிக் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எமது தாய்ச் சங்கம் உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல்.

புதிய சம்பளத்திட்டத்தை எதுவித காலதாமதமுமின்றி அமுலுக்குக் கொண்டுவரும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுதல்.

இலங்கையிலிருந்து வெளிநாடு செல்லும் அ. பொ. சே. தொழிலாளருக்கு 21 நாள் சம்பள ஓய்வு விடுதலை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுதல்.

அரசாங்கத்திடமிருந்து முற்பணமாகப் பெறும் வாகனப் பணம், 3 மாத முற்பணம் ஆகியவைகளுக்கு மற்றவர்களின் பிணையில்லாமல் சொந்தப் பிணையில் தந்து உதவும்படி வேண்டிக்கொள்ளுகிறது.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின் போது தலைவராக திரு. கே. செல்லத்துரையும், உபதலைவராக திரு. எட்வேட்டும், காரியதரிசியாக திரு. சி. ஆறுமுகமும், உபகாரியதரிசியாக திரு. என். முருகேசுவும், தனதிகாரியாக திரு. டி. பொன்னையாவும், கணக்குப் பரிசோதகராக திரு. கே. சண்முகலிங்கமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# கத்தியால் குத்தப்பட்டவர் ஆஸ்பத்திரியில் மரணம்

## கலப்பு திருமணத்தின் எதிரொலியாம்

பருத்தித்துறை, ஞாயிறு

சென்றவியாழக்கிழமை இரவு பருத்தித்துறைபொலிஸ் பகுதியைச் சேர்ந்த அல்வாய் வடக்கில் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 10 நிமிடத்தில் மரணமானர்.

"ஏ. ஆர். முகமத்ஹனிபா என்னும் 18 வயது இளைஞனின் சகோதரியை அல்வாய் வடக்கைச் சேர்ந்த முத்தையாகுமாரலிங்கமும் (வயது 31) என்பவர் முஸ்லிம் முறைப்படிவிவாகம் செய்து கொண்டார் என்றும் இவரின் வீட்டுக்கு அரிகில் உள்ள சீனியர் சிவகுரு இந்ததமிழ் முஸ்லிம் கலப்புத் திருமணத்தை கெலி செய்துகெண்டுதிந்தார். இதனல் ஆத்திரமடைந்த முத்தையாகுமாரலிங்கமும் முகமத்ஹனிபாவும் வியாழக்கிழமை இரவு 9-30 மணியளவில் சீனியர்சிவகுரு தேங்காய் ஏற்றச் சென்ற பொழுது காத்திருந்து குமாரலிங்கம் கட்டிப்பிடிக்க ஹனிபார், சிவகுருவை நெஞ்சிலும் முதுகிலும் கத்தியால் குத்தியாதாயும் இதுபற்றிக் கூறப்படுகிறது.

சீனியர்சிவகுரு குத்தப்பட்ட இடத்திலிருந்து பருத்தித்துறை மத்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானர்.

இவரின் மரணம் குறித்து பருத்தித்துறை மாஜிஸ்ரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் மரண விசாரணை நடத்தினர். மந்திகை ஆஸ்பத்திரி டி. எம். ஓ. திரு. எஸ். கதிர்காமத்தம்பி பிரேத பரிசோதனை நடத்தினர். பருத்தித்துறை பொலிஸ் சப்இன்பெக்டர் திரு.கந்தையா ஏ. ஆர். முத்துஹனிபாவை மாஜிஸ்ரேட் முன் ஆஜார் செய்தபோது நீதிபதி அவரை 10-4-62 வரை விளக்கமறியலில் வைக்கும் படி உத்தரவிட்டார். மற்ற சந்தேகநபரான முத்தையாகுமாரலிங்கம் இன்று (சனி) நண்பகல் பருத்தித்துறை மாஜிஸரேட் கோர்ட்டில் நீதிபதி முன்னிலையில் சரணடைந்தார். அவரையும் 10-4-62 வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.